₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 5 | May 2023



## சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்!

*“நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*– ஏசாயா 43:10*

# சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

# ஆரம்ப வரிகள்...

இந்த ஆண்டின் கருப்பொருள் 'நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்' (ஆகாய் 2:23) என்றிருப்பதால், இம்மாத அறைகூவலின் கருப்பொருளை ஏசாயா 43-ம் அதிகாரத்தை மையமாக வைத்து எழுதியுள்ளோம். சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யார்? எதற்காக தெரிந்துகொண்டார்? அவர்களின் பொறுப்பு என்ன? என்பதை தேவன் நமக்கு உணர்த்த, ஏசாயா 43:10-ல் 'நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, அறிந்து, விசுவாசிக்கும்படிக்கு' நம்மை அவருடைய சாட்சிகளாய் தெரிந்துகொண்டேன் என்கிறார். அப்போஸ்தலர் 4:20-ல் அப்படி அவரைக் குறித்து உணர்ந்து, அறிந்து, வாழ்ந்த பேதுருவும் யோவானும் கிறிஸ்துவினிடத்தில் 'நாங்கள் கண்டதையும் கேட்டதையும் பேசாமலிருக்கக்கூடாதே' என்று கூறுவதைப்போல, இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டிருக்கிற நாமும் நமது சொல்லாலும் செயலாலும் அவருக்கு பலத்த சாட்சிகளாய் வாழ தேவன் விரும்புகிறார். ஸ்தேவான் இரத்த சாட்சியாய் மரித்ததி னிமித்தம் சிதறிப்போன சீஷர்கள் யூதர்கள் நடுவில் மட்டுமே சாட்சிகளாய் வாழ்ந்து, புறஜாதி யினரை தேவமந்தைக்குள் சேர்க்க மறந்து சுற்றித்திரிந்தார்கள். ஆனால், அப்போஸ்தலர் 1:8-ல் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து தமது சுவிசேஷம் யூதர்களை மட்டுமல்லாது, புறஜாதிகளையும் சென்றடைய வேண்டும் எனக் கூறினார். எனவே, அதற்காகவே தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட பர்னபா நல்லவனாகவும், பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனாகவும் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ்ந்தபடியால், அவன்மூலம் அநேகர் தேவமந்தையில் சேர்க்கப்பட்டனர் (அப்.11:24). ஆகவே, அன்று அவன் இருந்த அந்தியோகியா பட்டண மக்களுக்கும், இன்று நமக்கும் அவனுடைய வாழ்வு ஒரு சவாலான பாடமாக அமைகிறது.




பர்னபா-தான் ஒருவன் மட்டும் சாட்சியாக இருந்தால் போதாதென்று எண்ணி, தன்னால் ஊழியக்காரனாக முதலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட பவுலையும் அழைத்து வந்து சாட்சியாக நிறுத்துவதைப் பார்க்கிறோம் (11:25). நாம் மட்டும் சாட்சியாக வாழ்ந்தால் போதாது, நம்மோடு இருப்பவர்களும், நம் குடும்பமும் தேவனுக்கு சாட்சிகளாய் வாழ வேண்டும். அந்தியோகியா பட்டணத்தில் பர்னபா என்ற ஒருவன் நற்சாட்சியுள்ளவனாக ஓராண்டு வாழ்ந்து காண்பித்ததினிமித்தம், தேவன் தமது திட்டத்தை அங்கே நிறைவேற்ற முடிந்தது. அதன் விளைவாக முதன்முதலில் அந்தியோகியாவில்தான் சீஷர்களுக்கு 'கிறிஸ்தவர்கள்' என்ற பெயர் வந்தது. கிறிஸ்து + அவர்கள் = கிறிஸ்தவர்கள். அந்நாட்களில் அப்பெயரால் அழைக்கப்பட்ட சீஷர்கள் யாவரும் கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பதையும், அவருடைய குணநலன்களையும் 16057172091 5ங்கள் வாழ்வில் சாட்சியாய் வாழ்ந்து காண்பித்தனர். அது அநேகர் தேவ மந்தையில் சேர பெரிதும் உதவியது. ஒரு பர்னபாவின் சாட்சியுள்ள வாழ்வு, அந்தியோகியாவிலுள்ள அநேகரை நல்லவர்களாக மாற்றியது. ஆகவே, ஒரு தனிப்பட்ட மனிதன் கிறிஸ்துவின் நற்குணங்களை உடையவனாக வாழும்போது அவனது குடும்பமும், திருச்சபையும், நாடும் நற்பண்புடையவைகளாக மாறும். நாம் எப்படிப்பட்ட சாட்சிகளாக வாழ்கிறோம் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம். நமது நற்சாட்சியான வாழ்வு நம் வீடுகளிலிருந்து ஆரம்பமாகி, நமது பணியிடங்கள், திருச்சபை, சமுதாயம், ஒட்டுமொத்த தேசம் மற்றும் உலகமெங்கும் பரவவே நாம் சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம் (அப்.1:8). ஒரே ஒரு வாழ்க்கை, அதுவும் சீக்கிரம் கடந்திடும். கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பதை நமது வாழ்வாலும், வார்த்தையாலும் இவ்வுலகிற்குக் காட்ட தேவன் விரும்பும் சிறந்த சாட்சிகளாய் நாம் வாழ்வோம். அதற்காகவே தெரிந்துகொள்ளப்பட்டோம். அதை உணர்ந்து, அறிந்து, நற்சாட்சி பெற்ற விசுவாசிகளாக நடமாடும் நிருபங்களாய் தேசமெங்கும் வலம் வருவோம். பிறர் நம்மைப் பார்க்கும்போது, "நீங்கள் இயேசுவா?" என்று கேட்டிடும் வகையில் நாம் அனுதினமும் உப்பாக கரைந்து, நறுமணம் வீசும் அவருடைய நற்கந்தங்களாய், ஜீவ வாசனையாய், சுடர் ஒளியாய், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சிகளாய் நம் வாழ்வின் மூலம் கிறிஸ்துவைப் பகிரங்கமாக வாழ்ந்து காண்பிப்பதற்கு தேவன்தாமே நமக்கு உதவி புரிவாராக!

- **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

"நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்தில் இருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றார். - லூக்கா 24:48,49

கிறிஸ்தவத்தின் உண்மையான பிரச்சினை நாத்திகமோ அல்லது நம்பிக்கையின்மையோ அல்ல, நற்சாட்சியற்ற ஒரு கிறிஸ்தவன் தன் ஆத்துமாவை மாய்மாலமாய் பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல எத்தனிப்பதே ஆகும்.
- ஜேம்ஸ் S. ஸ்டீவர்ட்

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார்.
- அப்போஸ்தலர் 1:8

'நற்சாட்சி' என்பது சுயசரிதைக்கு இணையான பதமல்ல! நாம் உண்மை யாகவே சாட்சியுள்ளவர்களாய் வாழும்போது, நம் வாழ்வு நம்மைக்குறித்து அல்ல, கிறிஸ்துவையே மையமாகக் கொண்டு பேசப்படும்.
- ஜாண் R.W. ஸ்டாட்


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| --- | --- |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...



இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியரனைவரும் அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எனது உடன் பங்காளிகளுக்கு, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

மே மாதம் 1-ம் தேதி 'சர்வதேச உழைப்பாளர் தினமாக' அனுசரிக்கப்படுகிறது. இத்தினம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உழைப்பாளர் உரிமைகளுக்காகவும், நாளொன்றுக்கு 8 மணி நேர வேலை என்ற வரையறைக்காகவும் அறியப்படுகிறது. சமுதாயத்திற்கு உழைப் பாளர்களின் பங்களிப்பு மற்றும் தியாகத்தை நினைவுகூரும் வகையில் 'மே தினம்' கொண்டாடப்படுகிறது. கொடூரமான உழைப்பாளர் சட்டங்கள், உழைப்பாளர்களின் உரிமை மீறல்கள், மோசமான வேலை நிலைமைகள் மற்றும் கடுமை யான வேலை நேரங்கள் ஆகியவற்றுக்கு எதிராக அமெரிக்காவில் உழைப்பாளர்கள் போராட்டம் நடத்திய காலத்திலிருந்தே இத்தினத்தின் முக்கியத்துவம் ஆரம்பமாகிறது. மே தினம் என்பது 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட உழைப்பாளர்களின் போராட்டங்களுக்கும், அதைத் தொடர்ந்து அடுத்தடுத்துவந்த அதிகாரத்து வத்திற்கும் ஒத்ததாக இருக்கிறது. இந்தியாவில் முதன்முறையாக 'மே தினம்' 1923-ம் ஆண்டு தமிழகத்தின் தலைநகரான சென்னையில் வைத்து கொண்டாடப்பட்டது. சமுதாயத்திற்கு உழைப்பாளர்கள் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூரும்போது, நமதாண்டவரின் திராட்சத் தோட்டத்தில் பணிபுரியும் உழைப்பாளர்களையும் நினைவுகூருவோம். மேலும் நாம் இந்தியாவின் திராட்சத்தோட்டத்தைச் சுவிசேஷத்தின் மூலம் சுதந்தரிக்க அதிக ஊழியர்களை அனுப்ப அறுப்புக்கு எஜமானரான ஆண்டவரிடம் அனுதினமும் ஜெபிக்க மறந்துவிடக்கூடாது. ஏனெனில், "அவர் (இயேசு) தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்" என மத்தேயு 9:37&38-ம் வசனங்கள் உரைக்கின்றன.

**புதிய நிதியாண்டின் ஆரம்பம்:** 2022-2023-ம் நிதியாண்டில் நமது அனைத்து தேவைகளையும் பூர்த்திச்செய்ய தேவன் கிருபையுள்ளவராயும், உண்மையுள்ளவராயும் இருந்திருக்கிறார். ஜெபத்துடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கிட்டத்தட்ட அடையும்படி ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் செயல்பட்ட நமது விரிவுப்பணி ஊழியர்கள், கௌரவ செயலர்கள், ஜெபக்குழுத்தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். FMPB ஊழியங்களில் தாங்கள் காட்டும் ஈடுபாடு தேவப்பணியில் பெரும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. இப்போது நாம் ஒரு புதிய நிதியாண்டிற்குள் அடியெடுத்து வைத்துள்ள நிலையில், நமது தேசத்தைச் சுவிசேஷத்தின் மூலம் சந்திக்க வேண்டும் என்ற தரிசனத்தை ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்குள்ளும் கொண்டுச்செல்ல தேவன் தாமே தங்கள் மூலமாய் செயல்படுவாராக!

**புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட மிஷனரி களுக்கான ஊழிய அறிமுக ஆரம்பப்பயிற்சி:** கடந்த நேர்காணலில் தெரிந்தெடுக்கப்பட்ட 17 மிஷனரிகள் ஒரு மாத காலம் விரிவுப்பணி ஊழியங்களைக் குறித்து அறிந்துணரவும், பின்பு 5 நாட்கள் இயக்கத்தின் அறிமுக ஆரம்பப்பயிற்சியை தலைமை செயலகத்தில் மேற்கொண்டு, அதன்பின் மிஷனரித் தரிசன பயணமாக நம் முதல் மிஷனரிப் பணித்தளமாகிய பெரியமலைக்கும் சென்று வந்தபின், பணித்தள ஊழியங்களைக் குறித்து அறிந்துணர பணித்தளங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த 17 மிஷனரிகளும் தேவனால் பலப்படுத்தப்படவும், வரவிருக்கும் சவால்களுக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்ளவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**தேசிய மிஷனரிப்பயிற்சி மையம் - பட்ட மளிப்பு விழா:** 10 மாத பயிற்சிக்காலத்திற்குப் பிறகு மார்ச் 25-ம் தேதி 5 மிஷனரிகள் பட்டம்

பெற்றனர். தற்போது அவர்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பணித்தளங்களுக்குச் சென்றுள்ளனர். அவர்களை உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள்.

**அருமையானவர்களின் மறைவு:** அருட்திரு. விக்டர் முருகேசன் அண்ணன் அவர்கள் கடந்த மார்ச் 24-ம் தேதி தன்னுடைய 71 -ம் வயதில் தேவ இராஜ்யம் சென்றடைந்தார். அவர் நமது தேசத்தின் மேற்குப் பகுதிகளிலுள்ள சில மக்களினக் கூட்டங்கள் மத்தியில் முன்னோடி ஊழியராக இருந்து, அவருக்குக் கொடுக்கப்பட்ட இயக்கத்தின் பல பொறுப்புகளிலும் உண்மையாய் தேவனுக்கு ஊழியம் செய்தார். தேவப்பணியில் அவருடைய வாழ்வு சிறப்பாகச் செலவிடப்பட்ட வாழ்க்கையாக அமைந்தது. நமது மிஷனரி திரு. நத்தானியேல் எட்வர்ட் அவர்களின் மருமகன் திரு. புளூமென் ராஜன் சத்தியா சில மாத காலங்கள் இரத்தப்புற்றுநோயுடன் போராடி, இளம் பருவ மாகிய தனது 33-வது வயதில் தன் ஓட்டத்தை முடித்து தேவராஜ்யம் சென்றடைந்தார். திரு. நத்தானியேல் அவர்களின் குடும்பத்திற்காகவும், விசேஷமாக கணவரை இழந்து துக்கத்திலிருக்கும் திருமதி. சாண்ட்ரா ஜீன் அவர்களுக்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**காக்கிநாடா கூடுகை:** ஏப்ரல் 1-3-ம் தேதிகளில் நமது ஊழியத்தை ஜெபத்தாலும் பொருளாலும் தாங்கிவரும் காக்கிநாடாவிலுள்ள போதகர் பென்னியின் சபையில் தேவ வார்த்தையைப் பகர்ந்துக்கொண்டதோடு, ஆந்திராவிலுள்ள சில தொலைதூர கிராமங்களையும் பார்வையிட வாய்ப்பு கிடைத்தது. இந்த விஜயம், நம் தேசத்தில் இன்னும் சந்திக்கப்படாத இடங்களுக்கு நாம் சுவிசேஷத்தை எடுத்துச்செல்வதின் அவசரத்தையும், அவசியத்தையும் எனக்கு மீண்டும் நினைப்பூட்டியது.

**டிவிஷனல் தலைவர்களின் ஜெபம் & திட்டக் கூடுகை:** நமது இயக்கத்தின் டிவிஷனல் தலைவர்களுடன் பெங்களூரில் வைத்து நடந்த 2 நாட்கள் ஜெபக்கூடுகை மற்றும் 2 நாட்கள் திட்டக்கூடுகையில் நான் கலந்துகொண்டேன்.

**ஊழியத்திற்கு அர்ப்பணித்தோரின் முகாம்:** தேவனை நேசித்து, அவருடைய பணியில் முழுநேரமாக ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்தோருக்கான முகாமொன்று சென்னையிலுள்ள சோழிங்கநல்லூரில் வைத்து நடைபெற்றது. இந்த 3 நாட்கள் கூடுகையில் அதற்கென பிரத்தியச்சமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 140 வாலிபர்கள் கலந்துகொண்டனர். அதில் பங்கு பெற்ற ஒவ்வொரு வாலிபரோடும் தேவன் தம்முடைய திட்டம் மற்றும் தரிசனத்தோடு இடைபட்டார்.

**மே மாத முக்கிய கூடுகைகள் & நிகழ்ச்சிகள்:** கீழே கொடுக்கப்பட்டுள்ள கூடுகைகளுக்காக தயவாய் ஜெபிக்கவும்.

**உத்தரப்பிரதேசம் & ஜம்மு விஜயம்:** மே மாதத் தின் முதல் இரண்டு வாரங்கள் உத்தரப்பிரதேசம் & ஜம்மு மாநிலப் பணித்தளங்களையும், மிஷனரிகளையும் சந்திக்கவிருக்கிறேன். இந்த சந்திப்பு அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**தமிழ்நாடு மாநில முகாம் - 2023:** தேவனுடைய அளவற்ற கிருபையினால் இவ்வருட தமிழ்நாடு மாநில முகாம் சேலத்திலுள்ள பெத்தேலில் வைத்து மே மாதம் 18-ம் தேதி காலை முதல் 21-ம் தேதி காலை வரை நடத்த ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளது. நமது தேசத்தின் இந்த அத்யாவசிய காலக்கட்டத்தில் நடைபெறவிருக்கும் இம்முக்கியமான முகாமில் ஜெபத்துடன் திட்டமிட்டுக் கலந்துகொள்ளுங்கள். உங்களோடு பல புதிய மக்களையும் அழைத்து வாருங்கள்.

**அம்ரித்சார் திருமண்டல குருத்துவ பட்ட மளிப்பு:** நமது மிஷனரிகள் 20 பேர் வருகிற மே மாதம் 28-ம் தேதி, CNI அம்ரித்சார் திருமண்ட லத்தின் பேராயர் மாமறைதிரு. பிரதீப்குமார் சமந்தராய் தலைமையில் குருத்துவ பட்டம் பெறவிருக்கிறார்கள். இது திருச்சபை மற்றும் ஊழியங்களுக்கு இடையேயான குறிப்பாக FMPB மற்றும் CNI அம்ரித்சார் திருமண்டலத்துடனான உறவில் ஒரு மைல் கல்லாக அமையும். இவ்வாறு நமது ஊழியங்களுக்கு உறுதுணையாய் நிற்கும் பேராயர் அவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, உங்கள் யாவரின் ஜெபங்களுக்காகவும், ஆதரவுகளுக்காகவும் நன்றி கூறுகிறோம்.

ஒரு நாளைக்கு ஒரு முறையாவது எங்கள் மிஷனரிகளை உங்கள் ஜெபங்களில் நினைவு கூரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

## (ஏசாயா 43)

'சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' என்பது இந்த மாதத்தின் கருப்பொருள். ஒரு நீதிமன்றத்தின் காட்சியை நம் கண்களுக்கு முன்பாக நிறுத்துவோம். சாட்சி என்பதற்கு 'ஆதாரம்' என்று பொருள். ஒரு நிகழ்வை நேரில் பார்த்த சாட்சிகள், உண்மையைப் பயமில்லாமல் அதன் உறுதித் தன்மையுடன் தெரிவிப்பார்கள். லேவியராகமம் 5:1-ல் 'சாட்சியாகிய ஒருவன் தான் கண்டதையும் அறிந்ததையும் தெரிவியாதிருந்தால் அது பாவம் என்றும், அப்படிப்பட்டவன் தண்டனைக்குரியவன் என்றும் வாசிக்கிறோம். எனவே அப்படிச் செய்யாதவர்களுக்கு அது குற்றமாகும். ஆதலால், நாம் எப்படிப்பட்ட சாட்சிகளாய் வாழ வேண்டும் என்பதற்கு வேதத்திலிருந்து ஒரு சில காரியங்களைத் தியானிப்போம்.

'தெரிந்தெடுத்தல்' என்ற எபிரெய சொல்லின் பொருள் ஏசாயா 43:10-ன்படி, 'ஒன்றை ஆராய்ந்து சோதித்து, அதன் தன்மை, செயல், திறன், பிரயோஜனம் ஆகியவற்றை அறிந்து, ஒரு சிறந்த நோக்கத்திற்காக அதைப் பிரித்தெடுப்பது' என்பதாகும்.

**சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் யார்?:** சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தங்களைத் தெரிந்துகொண்டவரை உணர்ந்து அறிந்து விசுவாசிக்கும்படியான சாட்சிகள் என்று ஏசாயா 43:10-ல் வாசிக்கிறோம். தெரிந்துகொண்டவர்களை 1. தேவனே சிருஷ்டித்து, 2. அவரே உருவாக்கி, 3. அவரே மீட்டுக்கொண்டு, 4. அவரே பேர் சொல்லி அழைத்து, 5. நீ என்னுடையவன் என்று நம்மில் உரிமை பாராட்டுகிறார் (ஏசா.43:1). பரிசுத்த வேதாகமத்தில் எங்கெல்லாம் 'யாக்கோபு' என்று எழுதப்பட்டு இருக்கிறதோ, அது தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பழைய வாழ்வையும், புதிய உடன்படிக்கையின்படி கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அழைப்பதாகவும் உள்ளது. 'இஸ்ரவேல்' என்று எங்கெல்லாம் வாசிக்கிறோமோ, அது தெரிந்துகொண்ட 12 கோத்திரங்களைக் குறிப்பதாகும்.

**சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் ஆசீர்வாதம்:** சாட்சிகளாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் வாழ்வில் தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்களை ஏசாயா 43-ல் அவர் அநேக வாக்குத்தத்தங்களாகக் கொடுத்திருக்கிறார். அதோடு அவர் ஆசீர்வாதங்களை எதற்காக, எங்கே, எப்பொழுது கொடுக்க வேண்டும் என்பதை "கொடு" என்றும், அப்படி அதை கொடுத்துவிட்டவர்களிடம், "கொண்டு வா" என்று ஒரு கட்டளையையும் கொடுப்பதைப் பார்க்கிறோம். அதை "கொ" என்ற எழுத்துத் தொடர்பான மூன்று வார்த்தைகளைக் கொண்டு விவரித்திருப்பதை ஜெப சிந்தையோடு வாசிப்போம்.

### 1. கொடுத்தேன் / கொடுப்பேன்! - ஏசாயா 43:3-5 - வாக்குத்தத்தம் & தரிசனம்:

நம்மைச் சாட்சிகளாக வாழ தெரிந்துகொண்ட தேவன், நம்மை ஒன்று செய்ய வைப்பதற்கு எதையாகிலும் நமக்குக் கொடுக்காமல், நம்மை எதையும் செய்ய சொல்வதில்லை.

அவர் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனையே கொடுத்திருக்கிறார். அவரே நமது வார்த்தை, ஜீவன், அவரே நமக்கு வாக்குத்தத்தம், தரிசனம் எல்லாம். அவர் சாட்சியாய் தெரிந்துகொண்டவர்களுக்கு “கொடுத்தேன்/கொடுப்பேன்” என்று ஏசாயா 43:3-5-ல் கொடுக்கின்ற வாக்குத்தத்தத்தை மூன்று பிரிவுகளாகப் பார்ப்போம்.

**அ - வாக்குத்தத்தம் கொடுத்தேன் (ஏசா.43:1-2):** *(i) தண்ணீர்களைக் கடக்கும் போது (43:2):* தெரிந்துகொள்ளப் பட்டவர்களின் வாழ்வில் வரும் துன்பங்கள் செங்கடல் போன்ற பெரிய அலைகளாக வந்தாலும், யோர்தான் போன்ற வெள்ளப் பெருக்கு ஆறுகளாக வந்தாலும் அது அவர்கள் மேல் புரளுவதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். *(ii) அக்கினியில் நடந்தாலும் (43:3):* தானியேல் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளப்படி, அக்கினியில் நடந்தாலும் என்பது பிரச்சினை என்ற உருவில் சாட்சியாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் வாழ்வில் சிறிதளவு தீயாக வந்தாலும், பெரிதளவு அக்கினி ஜுவாலையாக வந்தாலும் அது அவர்கள் மேல் பற்றாது என்று வாக்குக் கொடுத்து இருக்கிறார்.

**ஆ - வாழ்வளிக்கும் வார்த்தையாகிய இயேசுவைக் கொடுத்திருக்கிறார்:** தேவன் இயேசுவுக்குள் அனைத்து ஆசீர்வாதங்களையும் ஒன்றாக வைத்து, அவர் மூலமாய், அவரை விசுவாசித்தால் போதும் அனைத்தும் நமக்குக் கிடைக்கும் என்று ஆபிரகாமின் ஆசீர்வாதத்தினால் தம்முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காகக் கொடுத்து, இவ்வளவாக உலகத்தில் அன்புகூர்ந்தார்.

**இ - வளமான தேசமும், அதில் வாழும் மக்களையும் கொடுக்கிறார்:** சாட்சியாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய நம்மை நமது அடிமைத்தன வாழ்விலிருந்து மீட்கும் பொருளாக நமக்கு எகிப்தையும், அங்கே உள்ள மக்களையும், நம்முடைய ஜீவனுக்கு ஈடாக எத்தியோப்பியாவையும், சேபாவையும் கொடுத்தேன் (வச.3) என்கிறார். எனவே, நம்மை இரட்சித்தவராகிய கர்த்தருக்கு நாம் எவ்வளவு உண்மையுள்ள, ஜீவனுள்ள சாட்சிகளாக இருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது மிகவும் அவசியம்.

## 2. கொடு! - ஏசாயா 43:5-6:

அநேக நேரங்களில் ஆசீர்வதித்தவரை மறந்துவிட்டு, ஆசீர்வாதங்களை மட்டுமே சார்ந்து வாழும் நமக்குக் “கொடு” என்ற வார்த்தையின்கீழ் இப்பகுதி கூறும் செய்தியை 3 பிரிவுகளாகப் பார்ப்போம்.

**அ - ஆசீர்வதித்தவருக்குக் கொடு:** ‘கொடுத்தேன்’ என்று வாக்குக் கொடுத்தவர் ‘கொடு’ என்று திருப்பிக்கேட்பது, கொடுத்ததையே திருப்பிக்கேட்பது போன்று நமக்குத் தோன்றலாம். ஆனால், அதுதான் பேராசீர்வாதம். அநேக நேரம் நாம் தேவனுக்காக சாட்சி கொடுக்கும்போது, ஆண்டவர் நமக்கு சரீர, உலகப் பிரகாரமாகக் கொடுத்த ஆசீர்வாதங்களையே சொல்லுவோம். வீடு, கார், சம்பளம், பிள்ளைகள், சுகம், பாதுகாப்பு என்பதை மட்டுமல்ல, அவர் நமக்குக் கொடுத்திருக்கும் நன்மைகளுக்கு நாம் அவரிடத்தில் எந்த அளவுக்கு நன்றியுள்ளவர்களாய் அவருக்குத் திருப்பிக்கொடுத்திருக்கிறோம் என்பதைப் பொறுத்துதான் நம்முடைய ஆசீர்வாதமும், நன்றியுணர்வும் அமையும். ஆசீர்வாதம் என்றால் என்ன? *உலகம் சொல்லும் ஆசீர்வாதம்* - ஐந்து மடங்கு ஆசீர்வாதம். அது என்னவென்றால், (i) ஒரு அழகான மனைவி (ii) இரண்டு ஆசீர்வாதமான பிள்ளைகள் ஆசைக்கு ஒன்று ஆஸ்திக்கு ஒன்று (iii) மூன்று வசதியான படுக்கையறைகளைக் கொண்ட பிரம்மாண்டமான வீடு (iv) நான்கு சக்கர விலையுயர்ந்த வாகனம் (v) குறைந்தது மாதத்திற்கு ஐந்து லட்சத்திற்கும் அதிகமான வருமானம். *ஆண்டவர் சொல்லும் ஆசீர்வாதம்* - மூல பாஷையில் ‘‘பராக்’’ என்று கூறப்படுகிறது. அதன்

அர்த்தம் "இறக்கி வைக்கப்படுவதற்காக ஏற்றி வைக்கப்படுவது'' என்பதாகும். நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் தேவனால் நம் மேல் ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அவர் அதை எங்கே கொடுக்கச் சொல்லுகிறாரோ அங்கே அதை நாம் கொடுத்துவிட வேண்டும். இஸ்ரவேல் தேசத்தில் ஒட்டகங்களைச் சுமை சுமப்பதற்காக வைத்திருப்பார்கள். அந்த ஒட்டகத்தின் மேல் மீன்களை ஏற்றி மீன் வாசல்வழியாக எருசலேமுக்குள் கொண்டுச் செல்வார்கள். அந்த ஒட்டகம் தன் மேல் ஏற்றி வைக்கப்பட்ட அனைத்தும் தனக்கே சொந்தம் என்று நினைத்து, அச்சுமையை இறக்குவதற்கு தயங்கி இறக்கி வைக்காமல் இருக்கும்போது, அந்த ஒட்டகத்தின் மேல் ஏற்றி வைக்கப்பட்ட அனைத்து மீன்களும் நாற்றமெடுத்து, அந்த ஒட்டகம் எருசலேமை விட்டு துரத்தி விடப்படும். ஒட்டகத்தின் மேல் ஏற்றப்பட்டது அனைத்தும் எங்கோ ஒரு இடத்தில் இறக்கி வைக்கப்படுவதற்காகவே ஏற்றி வைக்கப்பட்டது என்பதுபோல நம்முடைய வாழ்விலும் தேவன் நமக்குக் "கொடுத்தேன்" என்று சொல்லி கொடுத்திருக்கிற ''ஆசீர்வாதங்கள்'' அனைத்தும் அவர் ''கொடு'' என்று கேட்கும்போது கொடுக்கப்படுவதற்காகவே கொடுக்கப்பட்டதாகும்.

**ஆ. ஆசீர்வாதமான சிறந்த வாழ்வைக் கொடு:** உலகப் பிரகாரமாக ஆசீர் வதிக்கப்பட்ட பொருட்களை மட்டுமல்ல, நமது ஆவிக்குரிய வாழ்வில் ஆசீர்வதிக்கப் பட்டவைகளையும் நாம் கொடுக்க வேண்டும். 'நான் சாவாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்' என்று சங்கீதம் 118:17-ல் வாசிக்கிறோம். நம்மை ஆசீர்வதித்துள்ள தேவனுக்கு நம்முடைய வாழ்விலுள்ள சிறந்ததைக் கொடுக்க வேண்டும். (i) *நமது முதன்மை காலத்தைக் கொடுப்போம்:* ஓய்வுநாளின் நேரங்களை மற்றும் ஓய்வுபெற்ற பின்பு இருக்கிற எஞ்சிய வாழ்வை அல்ல, ஒரு நாளின் முதன்மை நேரமும், முடிவு நேரமும் தேவனுடைய பணிக்காகச் செலவிடப்பட வேண்டும். பெற்றோர் தங்கள் சிறந்த பிள்ளைகளை தேவனுடைய பணிக்கென்று கொடுக்க வேண்டும். ஒன்றுக்கும் உதவவில்லை என்பதற்காக அவர்களைக் கொடுக்கக்கூடாது. போதகர்கள் சபையிலுள்ள வாலிபர்களை உற்சாகப்படுத்தி, அவர்களை ஆத்தும ஆதாயப்பணிக்கு தங்களின் சிறந்த வாழ்வைக் ''கொடு'' என்று சொல்லி அர்ப்பணிக்க வைக்க வேண்டும். (ii) *நமது முதன்மை பொக்கிஷத்தைக் கொடுப்போம்:* நாம் பெற்றிருக்கும் அனைத்து பொக்கிஷங் களும் அவர் நமக்குக் கொடுத்தது. நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆசீர் வாதங்களில் நாம் அவருக்குக் கிள்ளி கொடுப்பதற்கு அல்ல, அள்ளிக் கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவப்பணிக்குக் கொடுக்கும்போது, எஞ்சியதையும் மிஞ்சியதையும் அல்ல, சிறந்ததையே கொடுக்கப் பழகுவோம். அப்படியாக தேவன் நமக்குக் கொடுத்த நேரம், திறமை, தாலந்து, பொக்கிஷங்கள் அனைத்தையும் அவர் பணிக்கென்று கொடுத்து, பேராசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

**இ - ஆசீர்வாதங்களை தெற்கே வைத் திராமல் வடக்கே கொடு:** ஆசீர்வாதங்களை ''வடக்கே கொடு'' என்று கூறுவது ஒன்றிணைந்து செயல்பட்ட ராஜ்யத்தின் பிரிவைக் குறிக்கிறது. சவுல், தாவீது, சாலமோன் ஒன்றிணைந்த ராஜ்யத்தை ஆண்டவருக்காகக் கட்டியெழுப்பினர். இஸ்ரவேல் மக்கள் வடக்கு ராஜ்யமாகவும் (10 கோத்திரங்கள்), தெற்கு ராஜ்யமாகவும் (2 கோத்திரங்கள்) பிரிந்துப்போன 12 கோத்திரங்களைப் பார்க்கிறோம். தெற்கே ஆசீர்வதிக்கப்பட்டிருப்பவர்கள் வடக்கே கொடுப்பது அவசியம். அது தமிழ்நாட்டிலுள்ளோர் மேல் விழுந்த மிகப்பெரிய கடமையாகும். 12 சீஷர்களில் ஒருவரான தோமா நமது தேசத்திற்கு

மிஷனரியாக வந்தது, நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். வட இந்தியாவில் இன்னும் இயேசுவை ஒருமுறைகூட அறியாத ஜனங்கள் அநேகர் இருக்கும்போது, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை நாம் தெற்கேயே வைத்துக்கொள்ளாமலிருக்க தெற்கை நோக்கி வைத்திராதே என்றும், வடக்கை நோக்கி கொடு என்றும் சொல்லி தேவன் நம்மை எச்சரிக்கிறார்.

## 3. கொண்டு வா! – ஏசாயா 43:6-8 – சுவிசேஷம் & சாட்சிகள்:

**அ. குருடர்களையும் செவிடர்களையும் கொண்டு வா!** – தூரமான பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரர்களையும், குமாரத்திகளையும் என் நாமம் தரிக்கப்பட்ட யாவரையும் "கொண்டு வா" என்று தேவன் நம்மைப் பணிக்கிறார். கண்களிருந்தும் குருடர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் இன்னமும் என் நாமம் தரிக்கப்பட்டவர்கள் அநேகர் உண்டு. எனவே கண்களிருந்தும் குருடர்களாய், காதுகளிருந்தும் செவிடர்களாய் அவரைத் தேடியலையும் மக்களுக்கு வழி இதுவே என்று வழிநடத்தும் கலங்கரை விளக்குகளாய் நாம் அநேகரை அவரண்டை கொண்டு வரவே தேவன் நம்மைச் சாட்சிகளாக அழைக்கிறார் (வ.8).

**ஆ. எண்ணுக்கடங்காத திரளான ஜனங்களைக் கொண்டு வா!** – கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எண்ணுக்கடங்காத திரளான ஜனங்களைக் காணும்படியாக தேவன் நம்மைக் "கொண்டு வா!" என்று பணிக்கிறார். இப்பணியைத் தூதர்களை நம்பிக் கொடாமல், நம்மைச் சாட்சிகளாக தெரிந்தெடுத்திருப்பதினால் அவர் இரத்தத்தினால் கழுவப்பட்ட நம்மையே நம்பி ஜனங்களைக் "கொண்டு வா!" என்று சொல்கிறார். தேவன் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் ஜனங்களுக்கு 1,44,000 பேர் என்று 12 கோத்திரங்களில் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் 12,000 பேர் என்ற அளவிடப்பட்ட எண்ணிக்கை உள்ளது. ஆனால், எண்ணுக்கடங்காத திரளானோர் அவருடைய வருகையில் காணப்படுவதற்கு 'சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பல பாஷை பேசுகிறவர்களிலும் இருந்து அநேகர் வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாதது மான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளையங்கி தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நின்றிட' தேவன் நம்மையே அவருடைய சாட்சிகளாக நம்பி அழைக்கிறார் (வெளி.7:4,9).

**இ. எனக்குச் சாட்சிகளாய் கொண்டு வா!** – நம்முடைய வாழ்வும், வழியும், சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். 'கிறிஸ்தவர்கள்' என்று பெயர் பெற்றிருக்கிற நாம், நமது சொல்லாலும் செயலாலும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வாழ்ந்து, நம் மூலம் பிறரையும் அவருக்கு சாட்சிகளாய் கொண்டுவர அழைக்கப்படுகிறோம்.

**தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சாட்சிகளாய் வாழாவிட்டால் என்னவாகும்?:** நாம் தேவனுக்கு சாட்சிகளாய் வாழவிட்டால் சாபம் என்று ஒரு ஆபத்தான எச்சரிக்கையையும் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார் (ஏசா.43:28). நாம் கிறிஸ்துவுக்கு நற்கந்தங்களாய், சாட்சிகளாய் வாழ மறுக்கும்போது, நமது தேசத்தின், இயக்கத்தின், திருச்சபையின் தலைவர்களை தேவன் பரிசுத்த குறைச்சலாக்கி, சாபத்தையும் நிந்தையையும் நம் தேசத்தின் மேல் கொண்டுவர நாமே காரணமாகி விடுவோம். எனவே, பயத்தோடும் நடுக்கத்தோடும் அவருக்குச் சாட்சிகளாய் கிறிஸ்து வரும் வரை அநேகரை இந்த கல்வாரி மேட்டுக்குக் கொண்டு வருவதற்கு நாம் ஒளியாய், உப்பாய் வாழ்ந்து ஜொலிப்போம். அதற்கு கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக!

**- P.G. கிறிஸ்டோபர் & S.M. செல்வின்**
FMPB – மிஷனரிகள்



# பணித்தள விஜயமும், சாட்சியும்

**திரு. C. ரெஜினால்டு,**
தலைவர் – FMPB





ராஜ்மஹால் மலைத்தொடர்களில் வாழ்கின்ற மால்தோ மற்றும் சந்தால் இனமக்கள் மத்தியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மிஷனரிகள் உருவாக்கியிருக்கும் திருச்சபைகளைப் பார்த்துவிட்டு, அவர்கள் நடத்தும் ஆவிக்குரிய பெருவிழாக்களில் பங்குப்பெற நாங்கள் ஆவலாய் புறப்பட்டோம். 3 நாட்கள் நடைபெற்ற சந்தால் ஆவிக்குரிய பெருவிழாவில் 2 நாட்கள் திருநெல்வேலி பேராயர் மாமறைதிரு. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்கள் குடும்பமாகப் பங்குப்பெற்றது, ஒரு மாபெரும் பாக்கியம்.

ஏறத்தாழ 6700-க்கும் அதிகமான சந்தால் விசுவாசிகள் ஆவிக்குரிய ஒழுக்கத்துடனும் பொறுமையுடனும் கூட்டங்களில் பங்குப்பெற்றதைப் பார்த்து, அவர்களுடைய ஆவிக்குரிய முதிர்ச்சியைக் கண்டு வியப்புற்றோம். மதிய உணவைப் பெறுவதற்குக் கொளுத்தும் வெயிலில் அமைதியாகக் காத்திருந்த அவர்களின் பொறுமை, எங்களை நமது நகர்ப்புற ஆலயங்களில் திருவிருந்திற்குக்கூட முந்தியடிக்கும் அவலநிலையை நினைத்து வேதனையடைய வைத்தது. ஞாயிறு நடைபெற்ற திருவிருந்து ஆராதனை மகத்துவமான ஒன்றாக அமைந்தது. அவர்கள் தங்கள் காணிக்கைகளைப் பக்திப்பெருக்குடன் படைத்தது, கண்கொள்ளா காட்சியாயிருந்தது.

பேராயர் இரண்டு ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்த ஆராதனைகள் மிக ஆசீர்வாதமாக இருந்தன. ஆரம்பப் பள்ளிக்கூட அறைகள், சமையலறை, விடுதி காப்பாளர் தங்கும் அறை போன்றவைகளைத் திறந்து வைக்கவும் கர்த்தர் உதவினார். மால்தோ மக்களின் ஆவிக்குரிய பெருவிழாவில் பங்குப்பெறவும், மால்தோ மற்றும் சந்தால் மிஷனரிகளோடு ஐக்கியம் கொள்ளவும், சில சிறுவர் விடுதிகளைப் பார்க்கவும், பந்தேனி பள்ளிக்கூடத்தையும், சமுதாய நலத்திட்ட வளாகத்தைப் பார்க்கவும், சண்டிகோலா மருத்துவமனை வளாகத்தைப் பார்த்துவிட்டு, அறுவை சிகிச்சை அறை போன்ற சில அவசிய தேவைகளை ஜெபத்தோடு துவக்கி வைக்கவும் கர்த்தர் உதவினார்.

மிகுந்த மனநிறைவோடு ஜார்க்கண்ட் மாநிலத்திலிருந்து திரும்பினோம். அங்கிருக்கும்போதே என் மனைவி சற்று சுகவீனமாக இருந்தபோதிலும் இரயில் பயணங்களில் அவர்கள்

சுகம் பெற்றார்கள். ஆயினும் பெலவீனங்கள் என்னையும் தொற்ற, இருமல் மற்றும் மூச்சுத்திணறலினால் நான் மிகவும் சிரமப்பட்டேன். ஆகவே, சென்னை வந்தவுடன் என்னை மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தார்கள். தீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்த சில நாட்கள் நிகழ்ந்ததொன்றும் என் நினைவில் இல்லை. ஆனால், அத்தனை நாட்களும் மால்தோ மற்றும் சந்தால் இனத்தவர் யாவரும் என்னைச் சூழ நின்று, நடனமாடி பாடிக்கொண்டிருந்ததை என்னால் மறக்க இயலவில்லை. (அது கனவா, நனவா என்பதும் புரியவில்லை.) பின்பு நான் அறைக்கு மாற்றப்பட்டு, நலமுடன் வீடு வந்து சேர்ந்தேன். இருமல் குறைந்திருந்தது; ஆனால், மூச்சு விடுவதில் சிரமம் இருந்தது. திடீரென ஒருநாள் காலையில் எதிர்பாராத விதத்தில் எனக்கு மூக்கு மற்றும் வாய் வழியாக இரத்தம் கசியத்தொடங்கியது. உடனடியாக அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நான், சில நாட்கள் அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, பின்பு வீட்டிற்கு அனுப்பப்பட்டேன்.



எங்கள் குடும்பத்திலும் தேவ அனுமதியுடன் நுழைந்த இக்கடும் புயல், பல பாதிப்புகளை ஏற்படுத்தியது உண்மை. ஆனால், அதன் மத்தியில் கர்த்தர் எங்களுடனிருந்து, எங்களை கெர்ச்சிக்கும் சிங்கங்களிடமிருந்து விடுவித்தார். அவர் சிலுவையில் சம்பாதித்துக் கொடுத்த வெற்றி எங்கள் குடும்பத்தில் வந்த பாடுகளிலும், பெலவீனங்களிலும் நாங்கள் வெற்றி பெற பூரண பெலனீந்தது. தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள். தகுதியற்ற எனக்காக ஜெபிக்கவும், விசாரிக்கவும், ஆறுதல் கூறவும், ஆலோசனைகள் கூறவும் கர்த்தர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்ற குடும்பத்தை எனக்குத் தந்தாரே, அது நான் பெற்ற மகா பெரிய பாக்கியம்! அதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன்.

## FMPB - சிறுவர்களுக்கான வேதாகம தேர்வு - 2023




மாநில முகாமில் கலந்துகொள்ளும் அனைத்து சிறுவர்களையும் அங்கு நடைபெறும் மனப்பாட வசனப்போட்டியில் பங்கேற்க உற்சாகமாக அழைக்கிறோம்!

| | |
|---|---|
| LKG to II Std | மத்தேயு 5:1-10 |
| III Std to V Std | மத்தேயு 5:1-15 |
| VI Std to VIII Std | மத்தேயு 5:1-20 |

# நவோதயா குழுவினரின் பணித்தள விஜயம்!






நமது இயக்கத்தோடு இணைந்து ஆங்கிலம் பேசும் இளைஞர்கள் மத்தியில் பணிசெய்யும் நவோதய குழுவினராகிய நாங்கள் சென்னையிலிருந்து மார்ச் 3-ம் தேதி ஜார்க்கண்ட் மாநில பணித்தள விஜயத்திற்கான பயணத்தைத் தொடங்கினோம். அடுத்த நாள் ஜார்க்கண்டிலுள்ள பாக்கூரைச் சென்றடைந்தோம். அப்பயணத்தில் எங்களுடன் மிஷனரிகளான அருட்திரு. டேனியல் அருள்மணி மற்றும் அருட்திரு. K. ஹென்றியும் அவரது மனைவியும் இணைந்து கொண்டனர். நாங்களனைவரும் பாக்கூரிலிருந்து டாங்ராவிற்குச் சென்றோம். அங்குள்ளோர் எங்களை அவர்களது கலாச்சாரத்தின்படி இசையுடன்கூடிய நடனத்துடன் எங்களுக்கு மலர் மாலைகளை அணிவித்து, எங்கள் கால்களைக் கழுவி, அன்புடன் வரவேற்றனர். அவர்களின் அத்தகைய இனிய வரவேற்பிற்கு எங்கள் குழு மனதார சிரம் தாழ்த்தியது. அந்த நாளில் அங்கு குழுமியிருந்த சுமார் 5 குடும்பங்களுக்கு ஊழியம் செய்ய கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். அதுமாத்திரமல்ல, அங்கிருந்த ஒரு சிறுவன் வேதவசனங்களை மனப் பாடமாக உரைத்தது, எங்களுக்குப் பெரிய சவாலாக அமைந்தது. அவர்கள் எங்களுக்காக ஒரு சிறப்புப் பாடலையும் பாடினார்கள்.

பின்பு நமது FMPB தலைமைத்துவ பயிற்சி மைய வளாகத்தில் வைத்து, நாங்கள் நேரிடையாகச் சென்று பார்க்க வாய்ப்பில்லாமல் போன பகையா விடுதிச்சிறுவர்களின் புகைப்படங்களையும், வீடியோ காட்சிகளையும் கண்டோம். அச்சிறுவர்கள் சந்தித்த போராட்டங்களைக் குறித்து மிஷனரி சகோ. ஹிஜாம் கென்னடி சிங் அவர்கள் சுருக்கமாக எங்களுக்கு விவரித்தார். அவருடன் இணைந்து அச்சிறுவர்களுக்காக ஜெபித்தோம். பின்னர் மாலையில் தும்காவில் வைத்து நடைபெறவிருந்த ஆவிக்குரிய பெருவிழா வின் தொடக்க நிகழ்ச்சிக்கு கடந்து சென்றோம். பின் அங்கும் அதே கலாச்சார முறைப்படி இனிதே அவர்களால் வரவேற்கப்பட்டோம். ஏறத்தாழ 4000-க்கும் அதிகமான மக்கள் கூடியிருந்த அக்கூடுகையில் நாங்கள் பாடல்களைப்பாடி, அவர்களுடன் தேவ வார்த்தையைப் பகர்ந்துகொள்ள தேவன் எங்களுக்குக் கிருபை செய்தார். அங்கு விசுவாசிகள் கூடி கர்த்தரைக் கருத்தாய் ஆராதிக்கும் விதம் மற்றும் அவர்கள் உன்னிப்பாய் வேத வசனங்களைக் கேட்டு ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கு

எங்களைப் பெரிதும் உற்சாகப்படுத்தின. அந்த நாளிரவு நாங்கள் யாவரும் சாந்தனா சிறுவர் விடுதியில் தங்கி, அங்குள்ள சிறுவர்களிடையே சிறிது ஊழியம் செய்யும் பாக்கியம் பெற்றோம். அடுத்த நாள் காலை அச்சிறுவர்கள் மத்தியில் பெங்காலி பாடலொன்று பாடி, அவர்களுக்கு அப்பாடலையும் அதற்குரிய அபிநயங்களையும் கற்றுக்கொடுத்து மகிழ்வித்தோம். பின்பு தும்கா கூடுகையில் ஒரு பெங்காலி பாடல், குறு நாடகம் மற்றும் தேவ வார்த்தையைப் பகர்ந்து கொண்டோம். அங்கு கூடியிருந்த மக்களையும், அவர்கள் கர்த்தருக்காகக் கொண்டிருந்த தாகத்தையும் பார்த்து நாங்கள் கர்த்தரை மனதார போற்றினோம். இத்தனை காலங்களாக அம்மக்கள் மத்தியில் முன்னோடிகளாக ஊழியம் செய்த மிஷனரிகளின் வாழ்வை எண்ணி மிகவும் வியந்தோம். அங்கு வந்திருந்த அநேக மிஷனரிகளுடன் கலந்து பேசி, அவர்களுடன் தங்கி, அவர்கள் கடந்துவந்த கடினமான பாதைகள் மற்றும் சந்தித்த போராட்டங்களைக் குறித்து அவர்கள் மூலமாகவே கேட்டறிந்தது, எங்களை அதிக சவாலுக்குள்ளாக்கியது.

இம்மிஷனரிப்பணித்தள விஜயம் மெய்யாகவே எங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவருக்கும் பெருத்த ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கும், ஜார்க்கண்ட் ஊழியத்திற்காக ஜெபிப்பதற்குமான பாரத்துடனும் திரும்பினோம். அது மட்டுமல்ல, 4 கி.மீ தூரம் கல் குவாரி, புழுதி, குப்பைகள் வழியாகப் பள்ளிக்குச் செல்லும் பகையா விடுதிச் சிறுவர்களுக்கு பள்ளி வேன் ஒன்று வாங்கித் தர வேண்டும் என்ற அர்ப்பணிப்புடனும் 6-ம் தேதி சென்னை வந்தடைந்தோம். கர்த்தருக்கே மகிமையுண்டாகட்டும்!

**- ஜாண் லாங்வே,** நவோதயா குழு



# மகிமைக்குள் பிரவேசித்தார்

திருச்சி - புதூர், ஜெபக்குழுத்தலைவி திருமதி. லில்லி தாமஸ் அவர்கள், கடந்த 17.01.2023-ல் தேவ மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர்கள் மிஷனரிகளுக்காக ஜெபிப்பதிலும், அவர்களுக்காக உதாரத்துவமாகக் கொடுப்பதிலும், தொடர்பு கொள்ள வாய்ப்பிருந்தால், தொடர்ச்சியாக மிஷனரிகளோடு தொடர்பு கொண்டு உற்சாகப்படுத்துவதிலும் அருமையானவர்கள். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார்கள், வாரந்தோறும் பெண்களாக இணைந்து மிஷனரிகளுக்காக, தேசத்திற்காக ஜெபிப்பார்கள். மிஷனரிப்பிள்ளைகளின் கல்வித்தேவைக்காக மாதந்தோறும் காணிக்கை கொடுத்துத் தாங்கி வந்தார்கள். குறிப்பாக ஊரடங்கு சமயத்தில் தொலைபேசி வாயிலாக ஜெபத்தில் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தவர்கள். கடந்த நவம்பர் 2022 சுகவீனமடையும் வரை அதிகாலை 5 மணி ஜெபம், காலை 10:30 மணி ஜெபம், மாலை 5 மணி ஜெபம், இரவு 10.30 மணி ஜெபம், வெள்ளிதோறும் 3 மணி நேர (இரவு 10 மணி முதல் 1 மணி / 1.30 வரை) ஜெபம் என 84 வயதிலும் அனைத்து ஜெபத்திலும் தவறாமல் பங்குப்பெற்ற ஒரு ஜெப வீராங்கனைக்காக தேவனைத் துதிக்கிறோம். தாயாரை இழந்திருக்கும் திருமதி. ஹேனா டேவிட், திருமதி. ஷீபா ரவி, திரு. கிங்ஸ்லி ஜாஸ்மின் ஆகியோரின் குடும்பங்களை நமது ஜெபத்தில் தாங்குவோம்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



## அருட்திரு. விக்டர் முருகேசன்

(1952 - 2023)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 40 ஆண்டுகளாகப் பணியாற்றி பல திருச்சபைகளை குஜராத் வசாவா இனமக்கள் மத்தியில் உருவாக்கிய அருட்திரு. விக்டர் முருகேசன் அவர்கள், தனது 71-ம் வயதில் தேவனுடைய அழைப்பை ஏற்று தேவ மகிமைக்குள் பிரவேசித்தார்கள்.

தென்காசி மாவட்டம், கடையம் அருகிலுள்ள வெய்க்காலிப்பட்டி என்ற கிராமத்தில் வசித்து வந்த திரு. மோசஸ் மாயவன் & திருமதி. கிரேஸ் பாக்கியத்தாய் ஆகியோருக்கு மகனாக திரு. விக்டர் முருகேசன் 11.01.1952-ல் பிறந்தார். இவருக்கு நான்கு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு. இக்குடும்பம் பிற்காலத்தில் ஆண்டவரை அறிந்து கிறிஸ்தவர்களானவர்கள். இவர் எஸ்.எஸ்.எல்.சியை முடித்து, மேற்படிப்பாக ஐடிஐ மோல்டிங் படித்து, அதன்பின்பு, சென்னை - கிண்டியில் 1972 முதல் 1974 வரை பயிற்றுவிப்பாளர் பயிற்சியையும் முடித்தார். 1973-ம் ஆண்டு நமது மிஷனரி சகோ. பூமி நாதன் இவருக்கு கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்து சிலுவையில் சம்பாதித்த இரட்சிப்பு மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பாவமன்னிப்பைப் பற்றியும் மிகத் தெளிவாகப் பகர்ந்து கொண்டார். சகோ. பூமி நாதன் சொன்ன சுவிசேஷம் இவருக்குள் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணியது. அவர் கொடுத்த வேதத்தை அதிகமாக வாசிக்க ஆரம்பித்தார். ஒரு நாள் இரவில் 'பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்...' (மத்.9:6) என்ற வசனம் இவரோடு பேசியபடியால், இவர் தன் பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அதன்பின்பு இவர் கடலூரில் இருக்கும்போது, திரு. சுந்தரராஜ், திரு. டி.கே. டேவிட் & திரு. ஜாண் டையர் ஆகியோரின் ஆலோசனைகள் மற்றும் ஆவிக்குரிய சத்தியங்கள் இவர் மேலும் கிறிஸ்துவில் வளர ஏதுவாயிருந்தன.

பின்பு 1975-ம் ஆண்டு திரு. விக்டர் முருகேசன் நெல்லிக்குப்பத்தில் நடந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் கிதியோனியர் முகாமில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றார். இந்த முகாமின் செய்திகள், மிஷனரிப் பகிர்வுகள், பாடல்கள் இவருக்குள் ஆத்தும பாரத்தை வளர்த்த தோடு, தானும் ஒரு மிஷனரியாகச் செல்ல வேண்டும் என்ற தாகத்தையும் ஏற்படுத்தியது. 'பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்' (சங்.4:3) என்ற வசனத்தின் மூலம் தேவன் தன்னை மிஷனரியாகச் செல்ல அழைப்பதை இவர் உறுதிப்படுத்தினார். பின்பு 1977-ம் ஆண்டு ஜுலை மாதம் 15-ம் தேதி நமது இயக்கத்தில் மிஷனரியாக இணைந்து, ஒரு வருட மிஷனரிப்பயிற்சிக்காக இவர் பெத்தேல் வேதாகம நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். பயிற்சியை முடித்தவுடன், நடைமுறை சுவிசேஷ ஊழியப்பயிற்சிக்காக ஆப்ரேஷன் மொபைலைசேஷன் என்ற இயக்கத்திற்கு அனுப்பப்பட்டார். அதன்பின் 1979-ம் ஆண்டு ஜுன் முதல் மகாராஷ்டிரா

விலுள்ள அக்கல்குவா பணித்தளத்திற்குச் சென்று, அங்கு முன்னோடி மிஷனரியாக இருந்த திரு. நத்தானியல் லோகராஜ் அவர்களுடன் இணைந்து பணியாற்றி வந்தார். ஒருமுறை அம்பிளிபாரி என்ற கிராமத்தில் அவர்கள் இரவு நேர ஜெபக்கூடுகையை நடத்தும்போது வாய்பேச முடியாத, காது கேட்காத ஒரு வாலிபனுக்காக ஜெபித்தனர். அவன் சுகம் பெற்றான். இதனால் அங்கு முதன்முதலாக அவனு டைய பெற்றோர் தானுபாயின் குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது. பின்பு சில மாதங்களில் கன்காலா என்ற இடத்தில் ஒரு திருச்சபை உருவாகி, சிறு ஆலயம் கட்டப்பட்டது.

திரு. விக்டர் முருகேசன் & சகோதரி. அமலாவின் திருமணம் 1981-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதி ஆலங்குளத்தில் வைத்து நடைபெற்றது. திருமணத்திற்குப் பின், திரு. விக்டர் முருகேசனின் குடும்பம் குஜராத் மாநிலத்திலுள்ள செலம்பா என்ற பணித்தளத்திற்குச் சென்றனர். அங்குள்ள வசாவி இனமக்கள் மத்தியில் சுவிசேஷப்பணியை ஆரம்பித்து, கிராமங் களில் சென்று நற்செய்தியை மக்களுக்கு அறிவித்து வந்தனர். தேவன் இவர்கள் பணியை ஆசீர்வதித்து அநேகமாயிரம் ஆத்துமாக்களைத் தந்தார். தேவன் இவர்களின் திருமண வாழ்வை ஆசீர்வதித்து, இரு பெண் பிள்ளைகளைக் கொடுத்தார். 1983-ம் ஆண்டு செப்டம்பர் 26-ம் தேதி பெர்சிஸ் பாக்கியவதி பிறந்தாள். பின் 1985-ம் ஆண்டு ஜனவரி 10-ம் தேதி ஷேக்கினா பிறந்தாள். தற்போது பிள்ளைகள் வளர்ந்து தங்கள் மேற்கல்வியை முடித்து, திருமணமாகி பிள்ளைகளுடன் சாட்சியாக வாழ்ந்து வருகிறார்கள். 1993-ம் ஆண்டு முதல் இவருக்கு தென்மேற்கு பிராந்தியச் செயலர் பொறுப்பும் பின்னர் மேற்கு மண்டலப் பொறுப்பும் கொடுக்கப்பட்டு, அப்பொறுப்புகளை இவர் வியாராவிலிருந்து நிறைவேற்றி வந்தார். பின்பு 2011-ம் ஆண்டு பணித்தளச் செயலராகப் பொறுப்பேற்று, நாக்பூரை மையமாக வைத்து பணித்தள நிர்வாகத்தைக் கண்காணித்து வந்தார். பின் 2015-ம் ஆண்டு முதல் சென்னை தலைமைச் செயலகத்திற்கு மாற்றப்பட்டு, சொத்து மற்றும் திட்டங்கள் துறையின் செயலராகப் பணியாற்றினார். பின்பு தனது 65-வது வயதில் 2017-ம் ஆண்டு பணி ஓய்வுப்பெற்று, டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேல் வேதாகம நிலையத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அதன்பின் தனது மனைவியின் மரணத் திற்குப்பிறகு திரு. விக்டர் முருகேசன் தனது 2 மகள்களின் வீடுகளில் தங்கி வந்தார். 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இவர் திருச்செந்தூரிலுள்ள தனது மூத்த மகளின் வீட்டில் இருந்தார். 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதி இவர்கள் குடும்பமாக கோயம்புத்தூர் சென்றபோது, இவர்கள் பயணித்த இரயில் மணியாச்சியைக் கடந்தவுடன் அதிகாலை சுமார் 2 மணியளவில் இரயிலிலுள்ள கழிவறைக்குச் சென்ற அருட்திரு. விக்டர் முருகேசன் தனது உடல் பெலவீனத்தின் காரணமாக ஓடும் இரயிலிலிருந்து தவறி கீழே விழுந்துவிட்டார். ஆனால், அதை ஒருவரும் பார்க்கவில்லை. பின்பு தெரிந்தவர்களின் உதவியோடு அவரைத் தேடினபோது, அவர் இரயிலிலிருந்து கீழே விழுந்து மரித்துப்போனது, 25-ம் தேதி தெரியவந்தது. அச்செய்தி அனைவருக்கும் மிக்க அதிர்ச்சியாக இருந்தது. 2023 மார்ச் மாதம் 26-ம் தேதி உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு சென்னை திருமுல்லை வாயிலில் உள்ள கல்லறைத் தோட்டத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்திரு. விக்டர் முருகேசன் மிக எளிமை யானவர், பாசமுள்ளவர்; தன் நற்சாட்சியான வாழ்வின் மூலம் அநேகருடைய வாழ்வில் ஒரு தாக்கத்தை உண்டுபண்ணியவர். அவருடைய நல் வாழ்விற்காக தேவனுக்கு நன்றி கூறி, பிள்ளைகளின் குடும்பங்களை நமது ஜெபத்தில் தாங்குவோம்.

**- அருள்திரு. அறிவர். E. ராஜன்**

## பணித்தள விஜயமும் & ஆலயப்பிரதிஷ்டையும்



கோயம்புத்தூர் பகுதியிலிருந்து ஸ்கேன் அங்கத்தினர்களாக நாங்கள் 10 பேர் கூடி, 2 நாட்கள் பணித்தள விஜயமாக பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில பணித் தளங்களைப் பார்வையிடவும், அங்குள்ள ஒரு ஆலயப் பிரதிஷ்டையில் பங்கேற்கவும் கடந்து சென்றோம். பிப்.25-ம் தேதி பஞ்சாபிலுள்ள தபா மற்றும் புத்லாடா பணித்தளங்களைப் பார்த்துவிட்டு, பின்பு 26-ம் தேதி ஹரியானாவிலுள்ள ஃபத்தேஹ்பாத் பணித்தள அசோக் நகரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயப்பிரதிஷ்டையில் பங்கேற்க தேவன் எங்களுக்குக் கிருபை செய்தார். இவ்வாலயம் தேவ நாம மகிமைக்கென கோவை ஜெபக்குழு மற்றும் ஸ்கேன் தலைவர்களின் ஆதரவின் பெயரில் கட்டப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில முகாம் - 2023

**ஆயத்த உபவாச ஜெபம்**

மே 1, திங்கள் - காலை 9 மணி முதல் - மாலை 4 மணி வரை

பெத்தேல் வளாகம், டேனிஷ்பேட்டை, சேலம்

***ஜெபிக்க வாருங்கள்!***

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு** - திருவள்ளூர் மாவட்டம்

**இயேசுவுக்காக எரிந்திட இளைஞர் முகாம்**

**இயேசுவின் வருகைக்காக பாலம் அமைக்க ஓர் அழைப்பு 2023**

நாள்: 01.05.2023 திங்கட்கிழமை

நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

இடம்: S.D. மஹால், காந்தி நகர், பட்டாபிராம், சென்னை - 72.

*மதிய உணவு வழங்கப்படும்.* பதிவு கட்டணம்: ரூ.30/-

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



விழுப்புரம் – நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னாள் முன்னேற்றப்பணி செயலாளர் திரு. ஹேரிசன் ஞானதாசன் (வயது – 66) அவர்கள், கடந்த 13.03.2023 அன்று தேவமகிமைக்குள் பிரவேசித்தார்கள். விழுப்புரம் பகுதியில் நமது ஊழிய வளர்ச்சிக்காக பல ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றியவர். அன்னாரை இழந்து தவிக்கின்ற அவரது அன்பு மனைவி மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு வேண்டிய ஆறுதலையும், சமாதானத்தையும் தேவன் தந்தருள ஜெபிப்போம்.



ஈரோடு பணிமாவட்டத்தைச் சார்ந்த ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரான திரு. மனோகரன் (வயது – 85) அவர்கள், கடந்த 27.03.2023 அன்று கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார்கள். இவர் பவானி – ஈரோடு மாவட்டத்தில் 25 வருடங்களாக நமது இயக்கத்தின் ஜெபக்குழுத்தலைவராகப் பணியாற்றியவர். இவர் பெத்தேல் மாநில முகாமிற்காக பவானி பகுதியிலிருந்து அநேகரை அழைத்து வந்து உற்சாகப்படுத்தினவர்; குழந்தை ஆதரவாளர்; பணித்தள விஜயமாக நம்மோடு இணைந்து வட இந்தியா வந்தவர். அவரை இழந்து வாடும் அவரது மனைவி திருமதி. மெர்சி பத்மா (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை), மகள்கள் திருமதி. பியூலா சாந்தி & திருமதி. பிரிசில்லா மரகதம் மற்றும் மருமகனுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் தேவன் தாமே ஆறுதல் தரும்படி நம் ஜெபத்தில் நினைவுகூருவோம்.



நீலகிரி மாவட்டத்திலுள்ள நான்சச் எஸ்டேட்டில் கணக்காளராய் பணிசெய்து கொண்டிருந்த திரு. டேவிட் தவமணி அவர்கள், 04.04.2023 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார். இவர் நீண்ட காலம் FMPB ஜெபக்குழுத்தலைவராகவும், செயற்குழுவின் அங்கத்தினராகவும், இயக்கத்தின் வளர்ச்சிக்காய் நல்லா லோசனைகள் கொடுத்துவந்ததோடு, தூய யோவான் ஆலய அங்கத்தினர்களுக்கு ஊழிய தரிசனம் கொடுத்து அவர்களை ஊழியர்களை அனுப்பும் சபையாக உருவாக்கினவர். அநேக வீட்டு ஜெபக்குழுக்களை உருவாக்கி, பணித்தள விஜயம் மற்றும் மாநில முகாமிலும் பங்கு பெற ஊக்குவித்தவர். ஊழியர்களைத் தன் வீட்டில் தங்கவைத்து உபசரித்தவர். தனக்கடுத்த தலைவரைத் தேர்வு செய்து, பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, திருநெல்வேலிக்கு மாறி அங்கேயும் ஊழியங்களில் உற்சாகமாய் ஈடுபட்டார். இவரை இழந்து நிற்கும் குடும்பத்தாரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**அருட்திரு. டி.ஜே. தாமஸ்**

(1953 - 2023)

அருட்திரு. டி. ஜே. தாமஸ், 1953-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் தேதி கேரளாவிலுள்ள வடசேரிகரா என்ற கிராமத்தில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய தந்தை திரு. எம். ஏ. தாமஸ், தொலைபேசி அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார்; தாயார் திருமதி. அண்ணம்மா, குடும்பத் தலைவி. திரு. டி. ஜே. தாமஸுடன் உடன் பிறந்தோர் சகோதரர் டி. ஜே. ஜியார்ஜ் மற்றும் சகோதரிகள் மரியம்மா, ஆலீஸ் ஆகும். இவர்களுடைய பெற்றோர் சிறு வயதிலிருந்தே பிள்ளைகளை தேவனுக்குப் பயப்படும் பயத்திலும், ஆலயம் ஒழுங்காகச் சென்று சபை ஊழியங்களில் கலந்து கொள்வதிலும் உற்சாகப்படுத்தினர்.

## இளமைப்பருவம்

திரு. டி. ஜே. தாமஸ் தனது பள்ளி இறுதிக்கல்வியை (எஸ்.எஸ்.எல்.சி.) வடசேரிகராவிலுள்ள உயர்நிலைப்பள்ளியில் முடித்து, தன் மேற்கல்வியான பி.ஏ., இளநிலைப் பட்டப்படிப்பை வடசேரிகரா கத்தோலிக்கேட் கல்லூரியில் பயின்றார். இவர் தனது தாலந்தை வளர்த்துக்கொள்ளும்படி தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து போன்ற தொழில்கல்வியையும் கற்றார். இவர் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், இவருக்கு கிறிஸ்து தனது இரட்சகர் என்ற அனுபவம் இல்லை. ஒருசமயம் வடசேரிகராவிலுள்ள மார்தோமா ஆலயத்தில் நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூடுகையை வேடிக்கைப் பார்க்க தன் நண்பர்களுடன் திரு. டி. ஜே. தாமஸ் சென்றிருந்தார். ஆனால், இவரும் இவரின் நண்பர்களும் ஆவியானவரால் தொடப்பட்டு, செய்தியாளருடைய அர்ப்பணிப்பின் அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து முன் வந்து ஒப்புக்கொடுத்தனர். இவர் தன் பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அதன்பின்பு இவருடைய வாழ்வில் ஒரு மாற்றம் காணப்பட்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவினரோடு கூடி ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் ஜெபித்து வந்தார். இவர் வேதத்தை வாசிக்கும்போதும், மிஷனரிக்கூடுகைகளில் பங்குப்பெறும் போதும் பரிசுத்த ஆவியானவர் இந்திய தேசத்தின் இரட்சிப்பைக் குறித்த பாரத்தை இவருக்கு அதிகமாகக் கொடுத்தார். ஒருநாள் இவர் வேதம் வாசித்துக்கொண்டிருக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் மிஷனரியாகச் செல்லும் படியான அழைப்பைக் கொடுத்தார். எனவே, ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து இவர் தன்னை மிஷனரிப்பணிக்கென அர்ப்பணம் செய்து, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதி மிஷனரியாக இணைந்தார்.

திரு. டி. ஜே. தாமஸ் ஒருவருட மிஷனரிப் பயிற்சிக்காக டேனிஷ்பேட்டை, பெத்தேல் வேதாகம நிலையத்திற்கும், பயிற்சிக்குப்பின் ஹரியானா மாநிலத்திலுள்ள சிர்சா என்ற

பணித்தளத்திற்கும் அனுப்பப்பட்டார். கேரளாவிலிருந்து வந்த இவருக்கு வட இந்தியாவின் சீதோஷண நிலையான அதிக குளிர், அதிக வெப்பம் ஒத்துவராமல் அதிக சிரமத்திற்குள்ளானார். இந்நிலையில், தற்காலிகமாக ஜான்சி பணித்தள இயக்குநர் அலுவலகத்திற்கு இவர் 1981 டிசம்பர் 11-ம் தேதி மாற்றப்பட்டார். உடல் நலம் தேறின பின்பு, 1982-ம் ஆண்டு குஜராத் மாநிலத்திலுள்ள வியாரா தென் மேற்கு மண்டல அலுவலகத்திற்கு இவர் பணி மாற்றம் செய்யப்பட்டு, ஜூலை 9-ம் தேதி பணியில் இணைந்தார்.

## திருமண வாழ்க்கை

திருவல்லாவிலுள்ள மார்தோமா சுவிசேஷ சேவிகா சங்கத்தில் மிஷனரிப்பயிற்சி பெற்ற சகோதரி. சாராம்மாவுடன் திரு. டி. ஜே. தாமஸின் திருமணம் வடசேரிகராவிலுள்ள பரி. யோவான் மார்தோமா ஆலயத்தில் வைத்து 1983-ம் ஆண்டு, ஏப்ரல் 11-ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. தேவன் இவர்களுடைய திருமண வாழ்வை ஆசீர்வதித்து, இரு பெண் குழந்தைகளைக் கொடுத்தார். முதல் மகள் அனிலா ரூத் தாமஸ் 1984-ம் ஆண்டு, டிசம்பர் 28-ம் தேதி பிறந்தாள். இரண்டாவது மகள் பெரில் ரோஸ்லின் தாமஸ் 1991-ம் ஆண்டு, பிப்ரவரி 6-ம் தேதி பிறந்தாள். இன்றைய நாட்களில் அவர்கள் இருவரும் தங்களுடைய பட்டமேற்படிப்பை முடித்து, திருமணமாகி குடும்பங்களாகச் சாட்சியாக வாழ்ந்து வருகிறார்கள்.

திருமணத்திற்குப்பின், 1983-ம் ஆண்டு, திரு. டி. ஜே. தாமஸ் குடும்பமாகப் பஞ்சாபிலுள்ள பட்டிண்டா பணித்தளத்திற்கு திருச்சபை நாட்டும் பணியாற்ற அனுப்பிவைக்கப்பட்டு, சிறிது காலத்திற்குப்பின், மறுபடியும் ஜான்சி பணித்தள அலுவலகத்திற்கு மாற்றப்பட்டார்கள். ஆயினும், திரு. டி. ஜே. தாமஸின் உடல்நலக் குறைவால் 1987-ம் ஆண்டு அவர்கள் சென்னையிலுள்ள நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் நிதி அலுவலகத்தில் பணியாற்ற பணி மாற்றம் பெற்றனர். திரு. டி. ஜே. தாமஸ் நிதி அலுவலகத்தில் காசாளராக மற்றும் பணம் பட்டுவாடா போன்ற பணிகளைச் செய்து வந்தார். பின்பு 1996-ம் ஆண்டு அக்டோபர் முதல் சென்னையில் வசித்துவரும் மலையாளம் பேசும் கிறிஸ்தவர்கள் மத்தியில் அங்கத்தினர்களைக் கண்டுபிடிப்பது, ஜெபக்குழுக்களை உருவாக்குவது, தலைவர்களை உருவாக்குவது, தாங்குவோரைக் கண்டுபிடிப்பது, அவர்கள் மத்தியில் மிஷனரித் தரிசனக்கூடுகைகளை நடத்துவது போன்ற பணிகளைக் குடும்பமாகச் சிறப்பாகச் செய்து வந்தனர். 2005-ம் ஆண்டு, மே மாதம் 15-ம் தேதி வட இந்திய திருச்சபை, கிழக்கு ஹிமாலயன் திருமண்டலப் பேராயர் அவர்கள், திரு. டி. ஜே. தாமஸிற்கு குருத்துவப்பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள்.

அருட்திரு. டி. ஜே. தாமஸ் அவர்கள், 2018 நவம்பர் 30-ம் தேதி தனது 65-வது வயதில், பணிஓய்வு பெற்றார்கள். அதன் பின்னரும் தொடர்ந்து முன்னேற்றப்பணியில் உழைத்து வந்த அவர், தனக்கிருந்த பல உடல் பெலவீனங்களினிமித்தம் 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தும், மருத்துவர்களின் முயற்சிகள் பலனளிக்காமல், 2023-ம் ஆண்டு பிப்ரவரி 25-ம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரது சரீரம் 28-ம் தேதி சென்னை சேத்பட், மார்தோமா ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அடக்க ஆராதனைக்குப்பின் மீஞ்சூரிலுள்ள மார்தோமா ஆலயக்கல்லறைத் தோட்டத்தில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவருடைய நற்சாட்சியுள்ள வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். அவர் விட்டுச்சென்றுள்ள திருமதி. சாராம்மா மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களுக்காகத் தொடர்ந்து ஜெபிப்போம்.

**– அருள்திரு. அறிவர். E. ராஜன்**

## மே 1 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பாபு பெஞ்சமின், திருமதி. சிப்போரா பீரோ
திருமதி. புரோசன்சிதா மாலி, திரு. மனோஜ் P.J.
திருமதி. கோகனி சுமித்ராபேன் கிறிஸ்டியன்
திருமதி. ரூபா ஏலவாகி சன்னமல்லப்பா
திரு. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் R., திரு. ஜாண் பெனின் J.

## ஜம்மு

### பசோலி:

**சுபானி & எமி பாக்கியா, மத்தியாஸ் மால்தோ**

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களிலுள்ள 525 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. 6 இரவுநேர ஜெபக் கூடுகைகளும், 4 சிறுவர் முகாம்களும் முறையே நடத்தப்பட்டுள்ளன. சத்தீஸ் கட்டிலிருந்து செங்கல் செய்யும் தொழிலாளர்களாக தரம்கோட் கிராமத் திற்குப் புலம் பெயர்ந்து வந்திருக்கின்ற ஒரு குடும்பம் நமது ஊழியத்திற்குப் புதிய தொடர்பாளர்களாகக் கிடைத்துள்ளனர். கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கின்ற 7 குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 8 வருடங்களாகியும் குழந்தைபேறு இல்லாமலிருக்கும் லக்ஷ்மி நாராயணாவிற்கு ஆரோக்கியமான குழந்தைச் செல்வம் கிடைக்க; நமது புதிய விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்க; சுவிசேஷத்தைச் செவி வழியாகக் கேட்டிருப்போரும், கைப்பிரதிகள் மூலமாய் வாசித்தறிந்திருப்போரும் மெய்யான தேவனாம் இயேசுகிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இருளின் ஆதிக்கத்தில் இருக்கும் சத்துருவின் கோட்டைகள் தகர்ந்தொழியவும், அறியாமையினால் அந்த இருளின் ஆதிக்கத்திற்குள் அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் மெய்யான தேவனைக் கண்டறியவும் ஜெபிப்போம்.

## ஹிமாச்சலப் பிரதேசம்

### ஜியோரி:

**ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்**

**துதிக்க:** தேவ வார்த்தை சுவிசேஷமாக 245 பேருக்குப் புதிதாக அறிவிக்கப் பட்டுள்ளது. 14 புதிய ஏற்பாடுகளும், 1 வேதாகமமும் கொடுக்கப்பட்டுள்ளன. இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களும், ஊழியப் பின்தொடர்ப்பணி நிகழ்ச்சிகளும் நேர்த்தியான முறைகளில் நடைபெற்று முடிந்துள்ளன. 6 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடந்தேறியுள்ளன. கிருஷ்ணா பய்யா குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போதைப்பழக்க வழக்கங் களில் சிக்கித்தவிக்கும் புதிய தொடர் பாளர்களின் குடும்பங்களுக்காக; சுரேந்திரா, இவான், ஹீராலாலின் மகன் ஆகியோர் மீது சுமத்தப்பட்டிருக்கும் தவறான குற்றச்சாட்டுகளிலிருந்து அவர்கள் விடுபட; நித்தின் வலிப்பு நோயிலிருந்தும், சுகிலா மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்தும், காந்தா தேவி சரீரக்கட்டிகளிலிருந்தும், லக்ஷ்மி சரீர பெலவீனங்களிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## மே 2 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிசா பீட்டர் அருளானந்தம்
திரு. காட்வின் கிருபாகரன், திரு. சுனில் குமார்

### ஆனி:
**ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்**

**துதிக்க:** சுவிசேஷம் 2 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளது. 300 பேர் புதிதாக இயேசுவின் நற்செய்தியைக் கேட்டறிந்துள்ளனர். 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சுக்மு தேவி கர்ப்பப்பை புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைந்துள்ளார். பொக்னி கிராமத்தில் பிந்த் மற்றும் அவரது குடும்பம் நமது ஊழியத்தில் புதிய தொடர்பாளர்களாகக் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கையிட கம்லா மற்றும் பிம்லா குடும்பங்களுக்கு இருக்கும் தடைகள் நீங்க; விபத்தின்மூலம் ஏற்பட்ட பக்கவாதத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நமது புதிய தொடர்பாளர் மிண்ட் ராமிற்கு நல்ல சுகம் கிடைக்கவும், அவர் கிறிஸ்துவண்டை சேரவும்; பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க; ஆத்தும பாரங்கொண்ட தன்னார்வ ஊழியரொருவர் கிடைக்க ஜெபிப்போம்.

### ராம்பூர்:
**தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** 5 கிராமங்களிலுள்ள மக்கள் சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்டுள்ளனர். ஒருவர் கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளார். ஒரு வேதாகமமும், 14 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப் பட்டுள்ளன. 19 பேர் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டி வருகின்றனர். 74 இடங்களில் ஊழியப் பின்தொடர்ப்பணி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. ஜீவன் மஞ்சள்காமாலை நோயிலிருந்து சுகம் பெற்றுள்ளார். ஒரு புதிய ஆராதனைக்குழு கோல்ட் பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது. கமல் கிஷோருக்கு ஏற்பட்ட மரண ஆபத்தி லிருந்து அவர் சிற்சில காயங்களுடன் உயிர்த்தப்பியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவர் ஞாயிறு வேதாகம வகுப்பிற்கான உபயோகப் பொருட்கள் மற்றும் புத்தக கையேடுகள் யாவும் முறைப்படி விரைவில் ஆயத்த மாக்கப்பட; அஷோக் மற்றும் கமல் தங்கள் வாழ்வை முழுநேர ஊழியத் திற்கென அர்ப்பணிக்க; கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள சுனிதாவின் குடும்பம் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட ஜெபிப்போம்.

மே 3 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. விக்டர் ஜெயசீலன் C.
திருமதி. ஷீலா சண்முகம்
திரு. ஜெபராஜ் சாமுவேல் V.P.
திருமதி. சாராள் ஜான்சி ராணி ஜஸ்டின்
திரு. வினு M., திருமதி. ஆனந்தி சங்கர்

# பஞ்சாப்

## புத்லாடா: ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** புதிதாக 2 ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து தஞ்சமடைந்துள்ளனர். பரேட்டா, லிலா காலன், இரயில் நிலையத்தின் அருகிலுள்ள பகுதி, பிளாட் பஸ்தி ஆகிய 4 இடங்களில் சத்சங் கூடுகைகள் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. சாய்னி கிராமத்திலிருந்து புதிதாக 2 குடும்பங்கள் முதல்முறையாக நமது ஆலய ஆராதனைகளில் வந்து கலந்துகொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவயதிலிருந்தே மூச்சுத் திணறல் பிரச்சினையினால் அவதிப்பட்டு வரும் ஆயுஷ் மற்றும் 7 வயது சிறுவனான எக்னூர் பூரண சுகமடைய; புத்லாடா, பரேட்டா, மூணாக், தல்வாரி, ராலி, பச்சுன்னா ஆகிய பகுதிகளில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் நடத்த திறந்தவாசல் கிடைக்க; இங்குள்ள வாலிபர்களுக்கு தகுந்த கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகளும், ஏற்ற அரசாங்க வேலைகளும் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஊழிய நிகழ்ச்சிகளுக்காகவும், அதன்மூலம் ஊழிய இலக்குகளைக் குறித்த காலக் கட்டத்தில் வெற்றிகரமாக அடையவும்; இப்பணித்தளத்தில் நடைபெறும் நமது ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் நமது முன்னாள் வாலிப விசுவாசியான சோனி மாஸ்டரும், மற்றொரு விசுவாசியும் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## பட்டிண்டா:
## சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா; பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

**துதிக்க:** முதல்முறையாக சுவிசேஷ கைப்பிரதிகளை 900 மக்கள் பெற்றுச் சென்றுள்ளனர். 200 புதிய ஏற்பாடுகளும், 10 வேதாகமங்களும் மக்கள் மத்தியில் பகிரப்பட்டுள்ளன. ஜாந்துகியிலிருந்து 2 குடும்பங்களும், புச்சோ மந்தியிலிருந்து 2 குடும்பங்களும், மௌர் மந்தியிலிருந்து 3 குடும்பங்களும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயிருக்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மந்திகாலன் துணைமையத்தில் வைத்து நடத்துகின்ற சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடும் கேவல்சிங், ராஜாசிங், மன்பிரீத்சிங், ஜர்னெல்சிங் ஆகியோர் கிறிஸ்துவுக்காக உண்மை யாய் செயல்பட; வெளிநாடு சென்று பணிசெய்ய விசா கிடைக்கப்பெற்றுள்ள சிம்ரன் கௌர், லவ்பிரீத், மன்பிரீத் ஆகியோர் எல்லாவிதமான நாசமோசங் களுக்கும் விலக்கிக்காக்கப்பட; மௌர் மந்தி கிராம தர்சென் முதுகுத்தண்டுவட எலும்பு பிரச்சினையிலிருந்து பூரண குணமடைய; பசிகார் பஸ்தி, ஜாந்துகி, குமான், சார்சிங் மௌர், கோகார், மந்தி காலன் உள்ளூர் பகுதி, மெஹ்மத் திவானா, கந்தா பானா, செல்ப்ரா ஆகிய கிராமங்களிலிருந்து சுவிசேஷத்தை முதல் முறையாகக் கேட்டிருப்போர் அதற்குச் செவிசாய்க்க ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபாய் சைரஸ்
திருமதி. லீகர்ள் மேரி கோல்டன்
திருமதி. சீதா ஐசக், திரு. ஜெபக்குமார் P.
திருமதி. ரவுத் ஜசோதாபேன் பிரமோத்குமார்
திருமதி. ஜெபசீலி டேனியல் மார்வெல்ராஜ்
திருமதி. ஏஞ்சலின் விக்னேஷ்வரன்
திரு. அனில் குமார், திரு. நிரஞ்சன் குமார்

### சங்ரூர்: கிம்பால் திலீப்பாய்

**துதிக்க:** சுவிசேஷத்தினால் புதிதாக 3 கிராமங்கள் சந்திக்கப்பட்டுள்ளன. 200 பேர் முதல்முறையாகச் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். தற்கொலை முயற்சி செய்த விக்கி தற்போது தேவ வார்த்தையை முறையாகக் கற்றறிந்து வருகிறார். கக்ரா திருச்சபையினர் ஆவிக்குரிய வாழ்வில் அனுதினமும் வளர்ந்து வருகின்றனர். கடந்த லெந்து கால நாட்களில் வீடுகள்தோறும் ஜெபக்கூட்டங்கள் நடத்த தேவன் ஈந்துவந்த கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை வாஞ்சிப்போர் அனைவரும் விரைவில் விசுவாசிகளாக மாற; விக்கிக்கு இரத்தணுவின் அளவு அதிகரிக்க; அமான் கௌருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; நடக்காமல் நின்றுபோயிருக்கும் மனோவல் திருச்சபை ஆராதனை மீண்டும் தொடங்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருப்போர் கிறிஸ்துவின் கிருபை மந்தைக்குள் திரும்பவும் வந்துசேர ஜெபிப்போம்.

### லேஹ்ரகாகா:
### ஐசக் ஆபேல் & அன்னா ரோஸ்லின்

**துதிக்க:** சபை மூப்பர்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் 2 ஆவிக்குரிய பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. காரத் கிராமத்தில் ஒரு சத்சங் கூடுகையும், பர்த் கிராமத்தில் இயேசுத்திரைப்பட ஊழியமும் சிறப்பாக நடந்துள்ளன. ஊழியத்தை எதிர்த்துவந்த ஒரு குடும்பம் தங்களுக்கு நேரிட்ட கஷ்டங்களினால் தாங்கள் ஊழியத்தை எதிர்த்தது தவறு என்றுணர்ந்து நமது ஊழியர்களிடம் வந்தபோது, விசுவாசிகளும், சுதேச ஊழியருமாகக் கூடி அவர்களுக்காக ஜெபித்து அவர்களை அன்புடன் ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகிற புதிய நிதியாண்டின் ஊழிய இலக்குகளை அடைய ஊழியர்கள் ஜெபத்துடன் செயல்பட; சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்ற 7 புதிய குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## ஹரியானா

### ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி

**துதிக்க:** புதிதாக 3 குடும்பங்கள் நமது ஆலய ஆராதனைகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். கொழுப்பு கல்லீரல் பிரச்சினையிலிருந்து பாப்பி மற்றும் குர்பிரீத் சுகமடைந்துள்ளனர். காந்தா ராணி மற்றும் குல்விந்தர் கௌர் வெளிப்படையாக தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட ஆயத்தமாயுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அமான் கௌர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; குர்மீத் கௌர் கர்ப்பப்பை மற்றும் சீறுநீரகக்கல் பிரச்சினைகளிலிருந்து சுகம் பெற; 3 முறை கருச்சிதைவுகளுக்கு ஆளான ஜோகிராணி ஆரோக்கியமான குழந்தை பாக்கியங்களை அடைய; சர்ஜீத் கௌர் கொழுப்பு கல்லீரல் பிரச்சினையிலிருந்தும், பிரீத் கௌர் மனநிலை பாதிப்பிலிருந்தும், ரோகிராம், அமர்ஜீத் மற்றும் பொம்மி சிறுநீர் உப்பு பிரச்சினையிலிருந்தும், சத்பால் இருதயக்கோளாறிலிருந்தும் சுகமடைய; பிந்தர் சிங் சுர்ஜாவான் மற்றும் மங்காராம் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

**மே**
**5**
**வெள்ளி**

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஸ்டீபன் ஜெயசீலன் B.
திருமதி. ஜெஸி ஜீவபிரபா டேவிட்
திருமதி. மேபல் வசந்தகுமாரி பாபுராஜ்
திரு. புஷ்பராஜ் R., திரு. பரணிதரன் S.

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** ஒரு கிராமத்திலுள்ள 70 பேர் முதன் முதலாகச் சுவிசேஷத்தைக் கேட்டதில், 3 பேர் விசுவாசிகளாகியுள்ளனர். சபை மூப்பர்களுக்கான பயிற்சிக்கூடுகையில் 10 மூப்பர்கள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். பெண்கள் மற்றும் வாலிபர் முகாம்கள் அதில் பங்குப் பெற்றோருக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்துள்ளன. பப்லு மற்றும் பிம்லா வின் குடும்பம் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளதோடு, நமது ஞாயிறு ஆராதனைகளிலும் ஒழுங்காகப் பங்கேற்கின்றனர். ஓதான் சபையில் வாலிபர்களுக்கான ஜெபக்கூட்டமும், வேதாகம வகுப்புக்குழுவும் தொடங்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ள வாலிப விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும், வளரவும்; ஆத்தும ஆதாயப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட சபை மூப்பர்கள் தங்களது சபை ஊழியச்செயல்பாடுகளில் தீவிரமாகச் செயல்பட்டு, ஏராளமான ஆத்துமாக்களைக் கண்டெடுக்க; பப்லுவின் குடும்பம் சத்துருவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவை தங்களது இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நமது புதிய தொடர்பாளர்களான அமர்ஜீத், ஜஸ்பிரீத் மற்றும் ராணி இயேசுவைச் சொந்த இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; தங்களது பகுதிகளில் ஜெபக்குழுக்களைத் துவங்குவோம் என்று வாக்குக்கொடுத்தி ருக்கிற ஜெபக்குழுத்தலைவிகள் தங்களது வாக்கில் உண்மையாய் இருக்க ஜெபிப்போம்.

## சந்தோஷமாக மாறிய பயம்!

*மத்தியப்பிரதேசம், குணா பணித்தளம். இரகசிய காவல்துறை அதிகாரியான திரு. பிரேம் பரிகார் நமது மிஷனரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்கு நடக்கும் ஊழியங்களைக் குறித்து விசாரித்தார். பயத்தின் மிகுதியால் மிஷனரி அவரிடம் அதிகம் வாய்திறக்காத சூழ்நிலையில், அவர் பலமுறை தொடர்பு கொண்டும் மிஷனரி அவருடைய அழைப்பை ஏற்கவில்லை. பின்பு ஒருநாள் அந்த அதிகாரி அழைத்தபோது தேவன் கொடுத்த தைரியத்தில் மிஷனரி அவ்வழைப்பை ஏற்றபோது, அதிகாரி மிஷனரியின் முகவரியைக் கேட்டு, அவருடைய வீட்டிற்கு வந்து பணித்தள ஊழியங்களைப் பற்றி விசாரித்தார். அதோடு வேதாகமம் தொடர்பான கேள்விகளையும் கேட்டார். மிஷனரி தனது இரட்சிப்பின் அனுபவத்தை அவருடன் பகிர்ந்து கொண்டு, அவருக்கு சுவிசேஷம் கூறினார். பின்பு வேறொரு நாள் அவர் மிஷனரியைத் தொடர்புகொண்டு, மாலைநேரம் ஒரு குறித்த இடத்திற்கு வரும்படி கூறி, அறியாத புதிய பாதை வழியாக அவரை ஒரு பெரிய காவல் நிலையத் திற்கு அழைத்துச் சென்றார். பின் அங்கிருந்த விசாலமான மைதானத்திற்கு கூட்டிச்சென்று, இன்னும் அதிகம் இயேசுவைக் குறித்து கூறும்படி விருப்பத்துடன் கேட்டார். மிஷனரி சந்தோஷமாக சத்தியத்தை எடுத்துரைத்தார். பின் அந்த அதிகாரி சிறுநீரகப்பாதிப்புடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தன் தந்தையின் சுகத் திற்காக ஜெபிக்கும்படி வேண்டியதோடு, அடிக்கடி வந்து வேதத்தைக் கற்றுக்கொள்வதாகவும், அநேக கிறிஸ்தவ வழக்கறிஞர்களை அறிமுகப்படுத்தி வைப்பதாகவும் கூறினார். அத்துடன் பயமின்றி ஊழியம் செய்யுமாறும், எத்தேவையானாலும் எந் நேரத்திலும் தன்னை அணுகுமாறும் கூறிவிட்டு, ஒரு வேதாகமத்தைத் தன் பயன்பாட்டிற்குத் தருமாறும் கேட்டார். கர்த்தர் செய்த இவ்வழகிய காரியத்திற் காக கர்த்தருக்கு நன்றிக்கூறி, அதிகாரியுடைய முழு வீட்டாரும் இரட்சிக்கப்படவும், அவரது தந்தை விரைவில் சுகமடையவும் ஜெபிப்போம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராஜன் E., திரு. ராஜேந்திரன் S.
திரு. சந்தியா நாயக், திரு. சாம்ராஜ் D.
திருமதி. விமலா டெய்சி ஜாண்பால் ஹாரிஸ்
திரு. சீனு T.

## ஜீவன் நகர்:
### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** சுவிசேஷ வசனம் புதிதாக 125 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வேதாகமமும், 31 புதிய ஏற்பாடு களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 20 கிராமங்களில் ஊழியப் பின்தொடர்ப் பணிகளும், 7 இடங்களில் சத்சங் கூடுகைகளும், 3 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களும் மற்றும் 11 இடங்களில் உபவாச ஜெபக்கூட்டங்களும் நல்லமுறையில் நடைபெற்றுள்ளன. ஒரு கிராமம் புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 5 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந் துள்ளனர். தபாவாலி பகுதி சபை மூப்பர்களும், வாலிபர்களும் தங்களது பகுதி மக்களைச் சுவிசேஷத்தின்மூலம் சந்திப்பதில் உற்சாகம் காட்டிவருகின்றனர். தீய ஆவியின் பிடியிலிருந்தும், நெஞ்சுக் கட்டியிலிருந்தும் சுக விடுதலை பெற்ற தினால், தந்தையின் பாரம்பரிய மதவழி பாட்டிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ள அபுப்ஷேஹர் கிராம சுபாஷிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகாசா, வால்மீகி, ஒத்– ராஜ்புத் மற்றும் தனக் இனமக்கள் கூட்டங்களிலுள்ள நமது விசுவாசிகளின் உறவினர்களைச் சுவிசேஷத்தினால் சந்திப்பதற்கான திட்டங்கள் வாய்க்கப்பட; அபுப்ஷேஹர் கிராம தனக் இனமக்கள் யாவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; புத்தா ராம், வீணா, அவரது மூத்த மகன் சுனில் மற்றும் அவரது மனைவி மனிஷா, இளைய மகன் ஆதி மற்றும் அவரது மனைவி கவிதா, புத்தாராமின் மகள்களான பூஜா மற்றும் நிஷா ஆகியோர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட ஜெபிப்போம்.

## தோஷம்: ஜாண் டேவிட்சன்
### செல்வராஜ் & எஸ்தர்

**துதிக்க:** ஹஸாம்பூர் கிராம ஹேப்பி மற்றும் சாங் கிராம சோனு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். மூலப்பிரச்சினையிலிருந்து சுகம்பெற்று கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள அலக்புரா கிராம அமித் தனக்கு தேவனருளிய சுகத்தைச் சாட்சியாக தனது சகோதரர் ராஜேஷிற்கும், நண்பன் ரன்வீருக்கும் அறிவித்து, தற்போது அவர்களையும் ஆலயத்திற்கு அழைத்து வருகிறார். காலந்தவறி பெய்த மழைச்சேதங்களிலிருந்து கடுகு விளைச்சல் தேவ கிருபையால் பாதுகாக்கப்பட்டுள்ளது. தில்லூர், கரண்புரா மற்றும் பிஞ்சுகாரா பகுதிகளிலிருந்து புதிய தொடர்பாளர்கள் நமது ஊழியத்தில் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய பொறுப்புகளை ஏற்க ஆயத்தமாகும் சுதேச ஊழியர்களுக்காக; உறவினர்கள் தரும் உபத்திரவங்களினால் விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள நமது பிஞ்சுகாரா பகுதி புதிய தொடர்பாளர்கள் மீண்டும் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைய; தீய ஆவியின் பிடியிலிருந்து மஞ்சு விடுபட; நேர் இனமக்களிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள புதிய தொடர் பாளர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தைத் துணிவுடன் அறிக்கை செய்ய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஃப்ளாரன்ஸ் சுதாகரன்
திரு. சமரேந்திர சிங், திரு. குமாரவேல் S.
திரு. டேனியல் அருள்மணி J.
திருமதி. நகோமி ராஜம் சாவ் புன்யா
திருமதி. மேனகா கோபிகிருஷ்ணன்

## உத்தராகண்ட்

### தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** பராச்சி கிராமத்தில் 25 பேருக்கு சுவிசேஷம் முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. கேதா கிராம வினோத் மற்றும் நிஷா சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டிவருகின்றனர். தயனம்பர் கிராம கீதா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது தனது குடும்பத்தாருடன் சமாதானமாக வாழ்ந்து வருகிறார். தல்புரா கிராம சீமாவிற்கு ஜெபத்தின் மூலம் நல்ல வாழ்க்கைத்துணை கிடைத்துள்ளது. துவ்லாகந்த் கிராம சீமாவிற்கு அறுவைசிகிச்சை மூலம் அழகிய குழந்தை பிறந்துள்ளது. நசிமாவிற்கு கண் அறுவை சிகிச்சை நல்ல பாதுகாப்பான முறையில் நடந்து முடிந்துள்ளது. திம்ரி கிராம ராகேஷ் குமார் தன்னைக் கொலை செய்யவந்த கள்வனிடமிருந்து தப்பிப்பிழைத்துள்ளார். தவறான குற்றச்சாட்டினிமித்தம் சிறைவாசம் அனுபவித்துவந்த அனில், தீய ஆவியைக் கண்டு பயந்து மூக்கில் ஏற்பட்ட இரத்தக்கசிவின்போது இயேசுவின் நாமத்தை நினைவுகூர்ந்ததினால் பெற்ற விடுதலைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்திரா பால், சுர்ஜீத் மற்றும் பாபுவின் குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்க; லக்ஷ்மண், ராம்பாபு, ராஜ் குமார், ஜித்தேந்தர் ஆகியோரின் குடும்ப அங்கத்தினர்கள் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாக நிற்க; தவறான குற்றச்சாட்டினால் சிறையிலடைக்கப்பட்டிருக்கும் நமது விசுவாசியின் மகன் அனில் விரைவில் விடுவிக்கப்பட; 2 மாதங்களாகக் கஷ்டப்பட்டுவரும் நமது சய்திலிகன்ஜ் கிராம விசுவாசி கங்காதேவி தனது பல்வேறு பெலவீனங்களிலிருந்து சுகமடைய; நமது பெண் விசுவாசியொருவரின் மரணத்தி னிமித்தம் ஆறுதலற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்காகவும், அவரது மகன் சூரஜிற்கு தகுந்த வாழ்க்கைத்துணை அமைவதற்காகவும் ஜெபிப்போம்.

### நானக்மட்டா: சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** புதிதாக 3 விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 3 கிராமங் களிலுள்ள 87 பேருக்கு சுவிசேஷம் பறை சாற்றப்பட்டுள்ளது. இங்கு நடைபெற்ற ஆத்தும ஆதாய முகாமில் 25 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். பர்னி கிராம பரணிக்கா நெடுநாளாக இருந்த தீய ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் பெற்றுள்ள விடுதலைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது மனைவியை விவாகரத்து செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டிருக்கின்ற ஹர்தாஸ்பூர் கிராம ரிம்பியின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; விபத்தினால் உண்டான கையெலும்பு முறிவுப்பிரச்சினை யிலிருந்து மனோஜ் சீக்கிரத்தில் குண மடைய; வெளிநாட்டு வேலைக்காகக் காத்தி ருக்கும் ரிம்கு சிங்கிற்காக; சுவிசேஷத் திற்குச் செவிசாய்க்கும் கார் ஓட்டுனர் விக்கியின் பொருளாதார தேவைகள் யாவும் சந்திக்கப்பட; குடிப்பழக்கத்திலிருந்து பல்கர்சிங் விடுபட ஜெபிப்போம்.

மே
8
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜஸ்டின் Y.
திருமதி. நிருபோமா கோஸ்லா நாத்தான்

# டெல்லி

## பட்பர்கன்ஜ்:

### P.G. கிறிஸ்டோபர் & மேபல்

**துதிக்க:** கொடிய காசநோயிற்காக சிகிச்சை பெற்றுவந்த ராணி பூரண குணமடைந்துள்ளார். எலிசபெத், அர்ஜுன் மற்றும் குல்சனிற்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. பவ்யான்ஸிற்கு நல்லதொரு கிறிஸ்தவப் பள்ளியில் சேரும் சிலாக்கியம் கிடைத்துள்ளது. குடிக்கு அடிமையாகி வீட்டை விட்டு வெளியேறிய அபிஷேக் சுந்தர் மீண்டும் வீடு வந்து, தனது வேலைக்குக் கிரமமாகச் செல்லத் தொடங்கியுள்ளார். ராஜாவிற்கு நல்லதொரு வாழ்க்கைத்துணை கிடைத்துள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியத்தை முடித்துவிட்டு வரும்வழியில் உண்டான விபத்தில் உள்காயங்களுடன் நமது சுதேச ஊழியர் உயிர்த்தப்பிப் பிழைத்துள்ளார். கடந்த ஆண்டு பள்ளி இறுதித்தேர்வுகளை நல்லமுறையில் நிறைவுசெய்து, புதிய கல்வியாண்டிற்குள் நுழையும் கிருபையை தேவன் நமது பிள்ளைகளுக்கு ஈந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனுஜ், தீப்தி ராணி மற்றும் அவரது 3 வயது சிறுவன் ஜோசப் காசநோயிலிருந்து அற்புத சுகமடைய; பாத்திமா, சீமா சுதிர், ஷிவானி, சுந்தரி, கரோலின், மீனாக்ஷி, கோமல் மற்றும் சீமா சக்திராஜிற்கு நல்ல சுகப்பிரசவங்கள் அமைய; சாலு சுனில், ராம்சிங், பன்வாரிலால், ராஜேஸ்வரி, சரோஜா, நிஷா, ரேணு ஆகியோர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பிக்க; திரிலோக்புரி ஆலய வெள்ளையடித்தல் பணிக்கான தேவைகளைச் சந்திக்கவும், அவ்வாலயத்தை நல்லமுறையில் பராமரிக்கவும் அங்குள்ள விசுவாசிகள் முன்வர; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் சைமன் மற்றும் வில்சனிற்காக; குடி மற்றும் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கும் புஷ்பாவின் கணவர் ராஜுவும், அவர்களுடைய 2 வாலிப பிள்ளைகளும் அதிலிருந்து விடுபட; சஜ்வான் நகர் பகுதியில் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட முடியாமலிருக்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.

## *கூச்சலடங்கி, சுகநித்திரை கொண்டார்!*

*மத்தியப்பிரதேசம், கால்வா பணித்தளம். சாத்பா கிராம 80 வயது முதியவரான கீல்ராம் திடீரென சுகவீனமாகி, சிறுநீரகக்கட்டியின் நிமித்தம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். வயது மூப்பின் காரணமாக அறுவை சிகிச்சையோ, வேறு வித சிகிச்சையோ செய்ய முடியாத நிலையில், மருத்துவர் சில மருந்துகளைக் கொடுத்து வீட்டிற்கு அனுப்பினார். அந்த நாளிரவு முழுவதும் அம்முதியவர் அதிக வலியினால் நித்திரையின்றி கூச்சலிட்டார். அவருடைய பேரன் அனிலும், அவரது மனைவி சுனிதாவும் நமது விசுவாசிகளானதால், அவர்கள் உடனே நமது மிஷனரியைத் தொலைபேசியில் அழைத்து, அம்முதியவருக்காக ஜெபிக்கும்படி கேட்டனர். அவரும் ஜெபித்தார். ஜெபத்தின் விளைவு, அவர் வலி குறைந்து சுக நித்திரை செய்தார். இதைக் கண்ட குடும்ப மக்கள் கிறிஸ்துவை நம்ப ஆரம்பித்துள்ளனர். தற்போது அனில் மற்றும் அவரது மனைவியின் தொடர் ஜெபத்தினால் அவர் மேலும் நன்கு சுகம்பெற்று வருகிறார். தேவனுக்கே மகிமை!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முத்துச்செல்வி செந்தில்குமார்
திரு. வகேரா பிரமோத்குமார் தர்மபாய்

## ராஜஸ்தான்

### கேர்வாடா:

**போயா தேவுபாய் & ஜாமுபேன்**

**துதிக்க:** புதிதாக சுவிசேஷம் 3 கிராமங்களில் அறிவிக்கப்பட்டதில் 350 புதியவர்கள் பயனடைந்துள்ளனர். நமது ஜெபக்கூடுகைகளில் 24 புதிய குடும்பங்கள் பங்குப்பெற ஆரம்பித்துள்ளனர். விசுவாசத்துடன் நமது ஜெபக்கூடுகைகளில் பங்கேற்ற அநேக புதிய தொடர்பாளர்கள் தேவ கிருபையால் சுகமடைந்துள்ளனர். சுகுணாவும் அவரது கைக்குழந்தையும் இருசக்கர வாகன விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். வலபாய், லக்ஷ்மி, ஆஷ்மன், கௌரிபேன் மற்றும் வினோத் ஜெபத்தின் மூலம் தங்களுடைய சுகவீனங்களிலிருந்து பெற்றுள்ள சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடும் எதிர்ப்புகளைச் சந்திக்கும் இப்பகுதி விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; ஷில்பா சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், ராஜுபாய் புற்றுநோயிலிருந்தும் முழு சுகமடைய; பல வருடங்களாகக் குழந்தையில்லாமலிருக்கும் மனிஷா மற்றும் ஜஷோதாவின் குடும்பங்கள் குழந்தை பாக்கியங்களை அடைய; விமல் மற்றும் லாலி காசநோயிலிருந்து சுகம் பெற; குடிப்பழக்கத்திலிருப்போர் யாவரும் அப்பழக்கத்திலிருந்து விடுதலையடைய ஜெபிப்போம்.

### சாங்ரியா:

**செல்வம் தவமணி & ஹெப்சி**

**துதிக்க:** சுவிசேஷத்தை 56 நபர்கள் முதல்முறையாகக் கேட்டுள்ளனர். 3 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. நக்ரானா கிராம விசுவாசிகள் எதிர்ப்புகளின் மத்தியிலும் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நின்று கிறிஸ்துவில் வளர்ந்து வருகின்றனர். ஞாயிறு ஆராதனைகள், வேதாகம வகுப்புக்குழுக்கள், பெண்கள் கூடுகைகள் மற்றும் ஊழியப் பின் தொடர்ப்பணிகள் யாவும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளரான பபூர்ணா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; போதைப்பழக்கத்திலிருந்து சுனில் விடுவிக்கப்பட்டு, தனது குடும்பத்துடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; சுக்பிரீத்தின் தொடைப் பகுதியிலிருக்கும் கட்டி காணாமல் போக; லாப்மான் & காசிம்சிங் மாந்தி ரீகப் பழக்கவழக்கங்களை விட்டுவிட; தர்மேந்திராவும், அவரது மனைவியும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

மே 10 புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கென்னத் கரியப்பா, திரு. டேனியல் தனசிங் S.
திருமதி. ரத்னம்மா சந்தியா நாயக்
திருமதி. ஜெயா கௌரி செல்வின் சாம்
திருமதி. சாந்தம்மாள் ஜாண்சன்
திரு. உம்பியாக் லால், திருமதி. சரணி டிகே
திருமதி. ஷீபா புஷ்பராணி ஜாண் பெனின்
திரு. ஹென்றி சாலமோன் G.
திரு. பங்காரு நாயுடு கர்ரி, திருமதி. ரஷ்மி பிரவா
திருமதி. சங்கீதா ஜெசிந்தா இம்மானுவேல்

### ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** புதிதாக 2 பேர் கிறிஸ்துவை அறிகிற இரட்சிப்பின் அறிவிற்குள் வந்துள்ளனர். 145 பேர் புதிதாகச் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். 7 புதிய ஏற்பாடுகளும், 7 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. தப்லி மற்றும் குஞ்சான் கிராமங்களில் இயேசுத் திரைப்பட ஊழியம் சிறந்த முறையில் நடந்தேறியுள்ளது. ஹனுமான்கட் ஊர் பகுதி, மசானி, சிக் சானா ஆகிய இடங்களில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் ஆசீர்வாதமான முறைகளில் நடந்து முடிந்துள்ளன. குருதுவாராப்பட்டி பகுதியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருசக்கர வாகன விபத்திலிருந்து ராஜேந்தர் கௌரின் உயிர் பாதுகாக்கப்பட்டள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அறியாமையினால் புல்லட் பாபா கோவிலில் புல்லட்டை தெய்வமாக வழிபடும் மக்களின் கண்கள் திறக்கப்பட; இருசக்கர வாகன விபத்தின்போது உண்டான தீயினால் கால்கள் முழுவதும் எரிந்துபோன நிலையிலிருக்கும் பாரு சீக்கிரத்தில் சுகம் பெற; கிஷான் சிங், பசந்த் ஆகிய இருவரும் குடி மற்றும் தங்களது குடும்பத்தாரோடு சண்டையிடும் தீய பழக்கங்களிலிருந்து விடுபட; ராய் சீக், மஜ்பீ சீக், ஜீத் சீக், ஓத் ராஜ்புத், ராம்தாசியா, சோனி, அர்ரூர் மற்றும் நாயக் இனமக்கள் திரள்கூட்டமாய் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### ஜின்ஜக்:

### சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

**துதிக்க:** இப்பணித்தளத்தில் வைத்து நடத்தப்பட்ட கூட்டுநிலை சுதேச ஊழியர் பயிற்சிக்கூடுகையில் 26 சுதேச ஊழியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர். கான்பூர், பிரயாக்பூர், கொசய்பூர்வா, முதேரா, மொய்கி ஆகிய இடங்களில் ஜெபக்குழுக்கள் கிரமமாக நடைபெற்று வருகின்றன. மஜாம்பூர் கிராம பீட்டன் கர்ப்பப்பை நோய்த்தொற்று மற்றும் குடற்கட்டி பிரச்சினைகளிலிருந்தும் அற்புதமாகச் சுகம் பெற்றுள்ளார். முபராக்பூர், பாபன்பூர், ரசூலாபாத், ரூரா, தீபாபூர், ஜின்ஜக் ஆகிய சபைகளில் வைத்து 6 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகைகள் உற்சாகத்துடன் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கூட்டுநிலை விடுமுறை வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிக்கூடுகை ஜின்ஜக் போலா நகர் ஆலயத்தில் வைத்து நடைபெறவும், 5 துணைமையங்களில் நேர்த்தியாக விடுமுறை வேதாகமப்பள்ளி வகுப்புகள் நடத்தப்படவும்; புதிய கிராமப்பகுதிகளான 5 இடங்களில் நடக்கவிருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் எவ்வித தடையுமின்றி ஆசீர்வாதமாக நடந்தேற; நமது சுதேச ஊழியரின் மனைவி மாயாபதியும், சுரேஷ் சந்தும் குடற்புண் காய்ச்சலிலிருந்து முழு சுகமடைய; இப்பணித்தளத்திலுள்ள வாலிபர்களும், சிறுவர்களும் கிறிஸ்துவில் நன்கு வளர; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஊழிய நிகழ்ச்சிகளுக்காகவும், அதில் பங்குப்பெறுவோர் சிறந்த எண்ணிக்கையில் கிறிஸ்துவண்டை வந்து சேரவும் ஜெபிப்போம்.

## மே 11 வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்
திருமதி. ஜோன்ஸ் ஸ்வீட்லின் பால் டேனியல்
திரு. ஆனந்த குமார் செல்வராஜ் V.
திருமதி. ஜின்சி

### ரணியா:

**மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** இங்கு நடத்தப்பட்ட தேடுவோர் முகாமில் 4 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 4 வேதாகமங்களும், 13 புதிய ஏற்பாடுகளும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. நாய்க் கடியினால் பாதிக்கப்பட்டு 4 மாதங் களாக நடக்க இயலாமலிருந்த பாரா கிராம அனுராக் ஜெபத்தின்மூலம் நன்கு நடக்க ஆரம்பித்துள்ளார். மகேஷின் குடும்பத்தினர் சாலை விபத்தினின்று பாதுகாக்கப்பட்டுள்ளனர். கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு 2 நாட்களாக உணவேதும் உட்கொள்ளாமல் நம்பிக்கையின்றி தனது படுக்கையில் படுத்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஜெசவ்ரா கிராம சந்தோஷ்பால் தற்போது இயேசுவை விசுவாசிக்கத் தொடங்கி, நமது ஆராதனைகளில் கிரமமாக வந்து பங்கேற்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கணவனை இழந்திருக்கும் பிரபா, கங்கா பிரசாத் மற்றும் திலீப் மாந்திரீகக் கட்டுகளிலிருந்து விடுபட; 4 வருடங்களாக வீட்டைவிட்டு வெளியேறி எங்கிருக்கிறார் என்ற எந்த தகவலும் இல்லாதிருக்கும் 17 வயது சிவா சுகபத்திரமாய் வீடு திரும்ப; ராம் விலாஸ் மற்றும் கிருஷ்ணாவின் குடும்ப நிலப்பிரச்சினைகள் சுமூகமாக முடிவடைய ஜெபிப்போம்.

### கோண்டா சிறுவர் விடுதி:

**ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா**

**துதிக்க:** தனித்தாள் ஊழியம் மூலம் 5 பிள்ளைகள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். இங்கு தங்கி கல்விப் பயில்வதற்கு 19 பிள்ளைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நட் இனமக்கள் மத்தியிலிருந்து ஒரு குடும்பம் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளது. எதிர்ப்புகளின் மத்தியிலும் தொலைவில் அமைந் திருக்கும் ஆலயங்களுக்கு நமது விசுவாசிகள் கிரமமாக வருகை தருகின்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதிப்பிள்ளைகள் நல்ல தேர்வு முடிவுகளைப் பெற; ஊழியச் செயல்பாடுகள் நடைபெற்றுவரும் தில்காய், குக்குர் பொக்வா, பலுவா, சம்புதாரா மற்றும் நத்நகர் கிராமங்களில் ஏராளமான ஆத்தும அறுவடை கிடைக்க; இங்கிருக்கும் நிலப்பிரச்சினை வழக்கிற்கு சுமூகமான தீர்வு கிடைக்க; கோண்டா விடுதி மற்றும் பணித்தளத்தில் நடைபெறவிருக்கும் எதிர்கால ஊழியத் திற்கான திட்டங்கள் யாவும் ஜெபத்துடன் செயலாக்கம் பெற ஜெபிப்போம்.

## மே 12 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குமார் பால் K.
திருமதி. மித்லேஷ் தீப்ரத்னா

# மத்தியப் பிரதேசம்

### டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

**துதிக்க:** 'இயேசுவின் வாழ்க்கை சரிதை'-யின் 5000 புத்தக கையேடுகளும், 300 சுவிசேஷ கைப்பிரதிகளும், 50 சுவிசேஷ புத்தகங்களும் ஜீப்குழு மூலம் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் பகிரப்பட்டுள்ளன. குவாலியர் பெருவிழாவில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது. காலை தோறும் நடைபெறும் இணையதள ஜெபக்கூடுகையின் மூலம் விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் நன்கு வளர்ந்து வருகின்றனர். அமர்புரா கேரி திருச்சபையினர் தங்களுக்கான சபை மூப்பர்களை வகுக்கும் முறையில் சிறப்பாக வளர்ந்தேறி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிட்டோண்டா, பித்தர்வர், நயகாவ், சிம்ரியா, தய் மற்றும் சுல்தான்பூர் திருச்சபையினர் கிரமமாக ஞாயிறு ஆராதனையில் பங்கேற்பதற்கு முதலிடம் கொடுக்க; சுல்தான்பூர் மற்றும் நயகாவ் ஆலயங்களில் சீரமைப்புப்பணிகள் விரைவில் நடைபெற; பிரேம்நகரில் ஒரு ஆலயம் கட்டப்பட; நமது உள்ளூர் சுதேச ஊழியர்கள் அழியும் ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தால் நிரம்ப; வரும்நாட்களில் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட காத்திருக்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.

### பன்சேமால்: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தைக்குள் 7 புதிய விசுவாசிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். 13 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. புதிதாக 8 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. விடுமுறை வேதாகமப்பள்ளி பயிற்சி நிகழ்ச்சியில் தன்னார்வமாக 10 பேர் பங்கெடுத்துள்ளனர். நலியாம்பா கிராம ஆவிக்குரிய நிகழ்ச்சியில் 111 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். 11 கிராமங்களில் சிறுவர் வேதாகம வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. தங்களுடைய சபைகளைத் தாங்களே பொறுப்பெடுத்து நடத்த முற்பட்டிருக்கும் நமது சபை மூப்பர்கள் சிலர் தொடர்ந்து பிற ஆத்துமாக்களைத் தைரியமாக கிறிஸ்துவண்டை வழிநடத்த தேவன் அவர்களை உருவாக்கி வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது குர்முடி கிராம ஆலய ஆராதனைகளில் புதிதாக வந்து பங்கேற்போரின் ஆத்தும இரட்சிப்பிற்காக; இங்குள்ள ஒரு சபையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஞாயிறு சிறுவர் வேதாகமப்பள்ளி தூய ஆவியானவரின் வழிநடத்துதலினால் பயனுள்ள விதத்தில் தொடர்ந்து நடைபெற; சுபாஷ், ரீனாபாய், சர்தாபாய், பய்சி நய் ஆகியோர் வலிப்பு நோய் மற்றும் இதர பெலவீனங்களிலிருந்து பூரண சுகமடைய; முகேஷ் மற்றும் தீவானின் குடும்பம் கர்த்தருக்குப் பணிசெய்ய முன்வர பரிசுத்த ஆவியானவர் அவர்களது உள்ளத்தையும் மனதையும் ஆயத்தப்படுத்த; இப்பகுதியில் பணிசெய்வதற்கான தகுந்த உள்ளூர் சுதேச ஊழியரொருவர் கிடைக்க; பிற இடங்களுக்கு தொழிலினிமித்தமாக புலம்பெயர்ந்து செல்வோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், தொழிலின் மேம்பாட்டிற்காகவும்; எவ்வித மருத்துவ உதவியும் பெற இயலாதபடி வறுமைக்கோட்டின் கீழிருக்கும் அம்சியா வாய்ப்புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

## மே 13 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆல்பின் T., திரு. மித்ரன் E.
திரு. ரமேஷ் வேல்ராஜ் A., திரு. நெகேமியா
திரு. முத்தையா U. சாமுவேல்
திருமதி. பங்கஜம் ஹரிபாபு குந்த்ரா
திருமதி. ஹேனா மேரி ஸ்லெஸர் ராஜேந்திரன்

### சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** கெர்குந்தி கிராமத்தில் நடைபெற்ற இயேசுத்திரைப்பட ஊழியத்தின் மூலம் 90 பேர் ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். பஜார்கோத்ரா சபையில் வைத்து நடைபெற்ற பெண்கள் ஆவிக்குரிய பெருவிழாவில் 60 பேர் பங்கேற்று தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். ஷீலா பேனும் மகேஷும் ஜெபக்கூடுகையில் கலந்துகொண்டபின் தீய ஆவியின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். முன்நாட்களில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திவந்த சாந்த்பூர் கிராம தினேஷ் இப்போது விசுவாசியாக மாறி, ஆலய ஆராதனைகளில் குடும்பத்துடன் பங்கேற்கத் தொடங்கியுள்ளார். சுக்மா, துப்லிபாய் மற்றும் ரத்தன்மாய் பக்கவாதத்திலிருந்து அற்புத சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினிமித்தம் படுத்தப் படுக்கையாகக் கிடக்கும் நமது சுதேச ஊழியரின் தந்தை சிவ்லால் விரைவில் பூரண குணமடையவும், அவர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும்; ஷிண்டா தனது குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; நமது விசுவாசி ஜீனாபேனின் கணவர் தனது மாந்திரீக செயல்பாடுகளிலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பிக்க; கணவரின் குடும்பத்தினரால் வீட்டை விட்டு துரத்திவிடப்பட்டு, காசநோயினால் அவதிப்படும் சாதனா இயேசுவின் அன்பால் ஆறுதலடையவும், அவருடைய வல்லமையினால் அற்புத சுகமடையவும்; ரத்னாபுரா கிராமத்தலைவர் சுபாஷும் ஒருசில கிராமவாசிகளும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதிலிருந்தும், கிறிஸ்தவ நிகழ்ச்சிகளில் மக்களைப் பங்கேற்க விடாமல் தடுப்பதிலிருந்தும் மனம் மாறி, அவர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### அமலகாச்சி:

### கஜன் சம்பிரமரி & ரோஷிலா

**துதிக்க:** இப்பகுதியில் நடைபெற்ற ஆவிக்குரிய பெருவிழாவில் பங்கேற்ற நமது விசுவாசிகளில் சிலர் தங்களது வாழ்வை தேவப்பணிக்கென அர்ப்பணித்துள்ளனர். இருசக்கர வாகன விபத்தினால் தலையில் அடிபட்ட காயங்களுடன் சிகிச்சைப்பெற்றுவரும் நமது தன்னார்வ ஊழியர் லூக்கா மால்தோ மற்றும் அவரது குடும்பத்தினரின் ஜீவனை தேவன் இம்மட்டும் அற்புதமாகப் பாதுகாத்து வந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வசதியற்ற நிலையில் கல்வி கற்க முடியாதபடி பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் நமது விசுவாசிகளின் குழந்தைகளுக்கு நல்ல கல்வி வாய்ப்புகள் உருவாக; படிப்பறிவில்லாத நமது சபை மூப்பர்களுக்கு வாசிக்கும் திறன் கர்த்தரால் ஈவாய்க் கொடுக்கப்பட; கிராமங்களில் இருந்துகொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வுகள் கிடைக்க; அரசியல் மற்றும் சமுதாய மாற்றங்கள் மத்தியில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக வரும் ஆபத்தான சூழ்நிலைகளில் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் திடமாய் நிற்க ஜெபிப்போம்.

## மே 14 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானபுஷ்பம் அருள்ராஜ்
திரு. வினோத் குமார் சிங், திரு. ரவி K.
திருமதி. மமதா திம்மண்ணா, செல்வி. ரூத் மால்தோ

### கெய்ராஜோடி:

**சுச்செள & காம்புங் தாபா**

**துதிக்க:** கிறிஸ்துவை சொந்த இரட்சகராக 23 புதியவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். டோனிஜமாலி கிராம மர்கூஸ் மால்தோவின் குடும்பம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். நமது சுதேச ஊழியர் ஜோனத்தான் மால்தோவின் குடும்பத்தினர் சாலைவிபத்தில் பெரிய காயங்களேதுமின்றி அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளனர். கல்ஜோர் கிராம எஸ்தர் மால்தோ உடல் வீக்கத்திலிருந்து சுகமடைந்துள்ளார். 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகை பயனுள்ள விதத்தில் நடந்து முடிந்துள்ளது. தன்ஹாட்டி கிராமத்தில் வைத்து நடத்தப்பட்ட செளரியா மால்தோ வெளிப்புற சந்திப்பு ஊழிய ஆவிக்குரிய பெருவிழா சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய நிதியாண்டின் இலக்குகளை ஜெபத்துடன் அணுக; தங்களை தாங்களே உயர்வாக எண்ணிக்கொள்ளும் ஜமோலா பகுதி குருக்கள் மற்றும் தவ்கொட்டா பகுதி சுர்ஜா நமது ஊழியத்திற்குப் பங்கம் விளைவிக்காமலிருக்கவும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவிடாதபடி மக்களை அச்சுறுத்தும் அவர்கள் கிறிஸ்து வின் அன்பை ருசிக்கும் பாக்கியம் பெறவும்; நமது ஊழியத்தை எதிர்க்கும் கிராமத் தலைவர்களான தவ்கொட்டா கிராம பய்தி மால்தோ, பஸ்கி கிராம தேவா மால்தோ, சல் கோட்டா கிராம மகா மால்தோ, கொஹா கிராம ஜிம்மி மால்தோ ஆகியோர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பலாம்பி கிராம ஆபிரகாம் மால்தோ மற்றும் தனது நிலத்தை ஆலயம் கட்ட நன்கொடையாக ஈந்தளித்த பத்தன் பொடுவா கிராம பிலிப்ஸ் மால்தோ தங்களது விசுவாச பின்னடைவிலிருந்து மீண்டு வர; பிடுகெப்பு கிராம பய்தா மால்தோ மற்றும் மிதிஜாமிலி கிராம சாந்தன் மால்தோ வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற; பள்ளிக் கூட அரசாங்க வேலைகளினிமித்தம் கருத்து வேறுபாடுகளுடன் இருக்கும் நமது பத்ரியா கிராம விசுவாசிகளிடையே நல்ல ஐக்கியம் உருவாக ஜெபிப்போம்.

### *எதிர்ப்போரும் சரணடைவர்!*

*மத்தியப்பிரதேசம், டப்ரா பணித்தளம். ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரியான திரு. கெம்ராஜ் ரோஜாரியா வாடகை வீடொன்றில் நடக்கின்ற நமது ஜெயில்ரோடு ஞாயிறு ஆராதனையைப் பற்றி அங்குள்ள உள்ளூர் காவல் நிலையத்தில் புகாரளித்தார். காவல் நிலையத்தினரும் அங்கு வந்து விசாரனை நடத்திச் சென்றனர். ஆனாலும், அந்த ஆராதனை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது. பின்பு கெம்ராஜின் மகளுடைய திருமணம் நடைபெற இருந்த நிலையில், அதற்கு இரு நாட்களுக்கு முன்பு அவரது இளைய தம்பி திடீரென மரித்துப்போனார். இறுதிச்சடங்கு காரியங்களைத் துரிதமாக முடித்துவிட்டு, அவர்கள் திருமண காரியங்களை ஒழுங்கு செய்தனர். இதற்கிடையில் திருமண நாளன்று மணப்பெண்ணை ஒரு தீய ஆவி ஆட்கொண்டு அலைக்கழித்தது. உடனே, கெம்ராஜ் சிறிது தண்ணீருடன் நமது மிஷனரியிடம் சென்று ஜெபித்துத்தரும்படி கொடுத்தார். மிஷனரியும் ஜெபித்து, அவருக்குச் சுவிசேஷம் கூறினார். மணப்பெண் அற்புதமாக விடுதலை பெற்றாள். பின்னர் திருமணப்பந்தி பரிமாறுவதற்கு முன்பும் மிஷனரியை அழைத்து ஜெபிக்க வேண்டினர். மிஷனரியும் விசுவாசிகளுடன் சென்று ஜெபித்தார். எவ்வித சத்துருவின் போராட்டமுமின்றி, திருமணம் இனிதே நடந்து முடிந்தது. தற்போது கெம்ராஜ் மிகுந்த நட்புடன் நமது மிஷனரிகளிடம் பழகி வருகிறார். எதிர்ப்போரும் சரணடையும்படி அவர்கள் மத்தியில் மகத்துவமான கிரியைகளைச் செய்துவரும் தேவனுக்கே மகிமை!*

## மே 15 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜான்சி ராஜேந்திரன்
திரு. தாமஸ் மேத்யூ, திரு. பாபு புஷ்பராஜ் D.
திருமதி. சாந்தி ஞானப்பண்டிதன்
திருமதி. டாக்டர். வில்சட் கிறிஸ் L.
திரு. டைட்டஸ் பாபு பொலவரப்பு
திருமதி. செல்வராணி பரணிதரன்
திருமதி. லட்சுமி வேடியப்பன்
திரு. பிஜு லால், திரு. பாகிரதி பிசோயி
திரு. கிம்பால் திலீப்பாய் ரகுபாய்
திரு. சுரேஷ் மால்தோ S., திரு. அஜய் பார்டே
திரு. தேபாஷிஸ் ஹெம்ப்ராம்

### அமரபாடா:

**வியாசு பாபு &சௌந்தர்ய ரேகா**

**துதிக்க:** சுவிசேஷத்தை 8 கிராமங்களிலுள்ள 898 பேர் முதல்முறையாகக் கேட்டுப் பயனடைந்துள்ளனர். 24 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புதிதாக 45 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். ஊழியப்பின் தொடர்ப்பணியாக 20 கிராமங்களில் மீண்டும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இயேசுத்திரைப்பட ஊழியத்திற்கென புதிய புரொஜெக்டர் ஒன்று கிடைத்துள்ளது. கணேஷ் டுடு, சக்கல் சோரேன் வலிப்பு நோயிலிருந்தும், முன்சி மராண்டி காசநோயிலிருந்தும், ரம்தான் மற்றும் ஜுனாஸ் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் அற்புத சுகமடைந்துள்ளனர். இங்கு நடத்தப்பட்ட பெண்கள் பயிற்சி ஊழிய நிகழ்ச்சியில் 50 பெண்கள் கலந்துகொண்டு, தேவ வார்த்தைகளின் மூலம் அவர்கள் நன்கு ஊக்கம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காண்பிக்கப்படும் இயேசுத் திரைப்பட நிகழ்ச்சிகள், ஊழிய நாடக நிகழ்ச்சிகள் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மூலம் மக்கள் மனந்திரும்புவதற்கு பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசை கிடைக்கவும், அவர்கள் விசுவாசத்தில் வளர்ந்தேறவும்; மிதுன் & மெரி, ரிச்சர்ட் & தெரேசா மற்றும் சாலமோனின் குடும்பத்திற்கு மழலை பாக்கியங்கள் கிடைக்க; தீய ஆவியின் பிடிகளிலிருந்து தனிஷ், சந்தீப், சுதிர் மற்றும் மோதிலால் விடுவிக்கப்பட; மரியம் பக்கவாதத்திலிருந்தும், சோம் முர்மு மற்றும் டேனியல் காசநோயிலிருந்தும், சந்தோஷ் வலிப்பு நோயிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## *யாரானாலும் மனதுருகும் கர்த்தர்!*

*குஜராத், அஹ்வா பணித்தளம். அங்குள்ள கிறிஸ்தவ எதிர்ப்பாளர் கூட்டத்தைச் சார்ந்தவர், பிரஜித்பாய். இவர் பசுமாடுகளைத் தனது வண்டியில் ஏற்றிச்செல்லும்போது, கையும் களவுமாகப் பிடிபட்டார். அதனால் இவரது வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு, இவர்மீது வழக்கு பதிவானது. இவர் இருமுறை பற்பல செல்வாக்கு மிகுந்தவர்களைக் கொண்டு வண்டியை மீட்க முயற்சிகள் எடுத்தும், அவை வீணாய் போயின. நமது சுதேச ஊழியர் அக்கிராமத்திற்குச் சென்றபோது, இவரைச் சந்தித்து இவருக்காக ஜெபித்தார். அதன் விளைவு, உடனே உயர்நீதிமன்றத்திலிருந்து ஏப்ரல் 1-ம் தேதி இவரது வழக்கு முடிந்தது எனவும், வண்டியை எடுத்துச் செல்லலாம் எனவும் இவர் கட்டளை கிடைக்கப்பெற்றார். இதுவரை இவர் எந்த ஆராதனையில் பங்குப்பெறாவிட்டாலும், இயேசுவே தன் வாழ்வில் இந்த அற்புதத்தைச் செய்தார் என சாட்சி கூறுகிறார். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக! திருமணமாகி 25 வருடங்களாகியும் குழந்தையில்லாமல் இருக்கும் இவர்களுக்கு மழலை பாக்கியம் கிடைக்கவும், அதன் மூலம் அக்கிராமம் முழுவதும் இயேசுவைக் குறித்து அதிக மறியவும் ஜெபிப்போம்.*

## மே 16 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வில்சன் D., திரு. எபனேசர் G. சாம்
திருமதி. சினிக்தா மோகினிதேவி ஜீவன் ரஞ்சன்
திருமதி. கிறிஸ்டி ஜெயந்தி சதீஷ் குமார்

### டோனி பிச்சக்கனி RCP & சிறுமியர் விடுதி:

**டிங்கு ஸெமே & இலா ஸெமே**

**துதிக்க:** தேவ கிருபையால் இங்குள்ள கல்வி மையங்கள் நல்ல முறையில் இயங்கி வருவதோடு, சிறந்த எண்ணிக்கையில் பிள்ளைகளும் இதில் இணைந்து ஆர்வமுடன் கிரமமாகப் பயின்றுவருகின்றனர். தும்கி மற்றும் எக்கோபாராவில் நடைபெற்றுவரும் கட்டுமானப்பணிகள் நிறைவுபெறும் நிலையில் இருக்கின்றன. வேதத்தைப் பயனுள்ள விதத்தில் வாசிப்பதைக் குறித்து நடத்தப்பட்ட ஒருநாள் வேதாகமக் கல்வி முகாம் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளது. சிறுவர் சுவிசேஷ ஐக்கிய குழுவினர் மூலம் அங்குள்ள சிறுமியர்களுக்கு ஒருநாள் ஆவிக்குரிய கூடுகை சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளது. பிடுசாப்ரியில் ஒரு புதிய கல்வி மையம் துவங்கப்பட, அதில் சேரவிருக்கும் பிள்ளைகளின் பெயர் பட்டியல் விபரம் சிறுவர் பராமரிப்பு ஊழியப்பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அக்காரியம் சீரான முறையில் செயல்பட்டு வருகிறது. நமது அநேக கல்வி மையங்களில் புதிய சமையல் அறைகளும், பணியாளர்கள் தங்குமிடங்களும் அங்குள்ள பிள்ளைகளுடைய பெற்றோர்களின் ஒத்தாசையோடு கட்டப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில மையங்களில் காணப்படும் தண்ணீர் பற்றாக்குறை நீங்கவும், தொடர்ந்து தண்ணீர் கிடைப்பதற்கான நீர்வளங்களை தேவன் கட்டளையிடவும், இத்தண்ணீர் பற்றாக்குறையினால் தடைபட்டு நிற்கும் கட்டுமானப்பணிகள் யாவும் தொடர்ச்சியாக நடைபெறவும்; இங்கு பணிபுரியும் பொறுப்பாளர்களுக்கு போதுமான தங்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட; கர்காமாவிலுள்ள கல்வி மையம் செயல்பட முடியாதபடி அந்நில உரிமையாளருடன் இருக்கும் பிரச்சினைகள் தீர்வுக்கு வந்து, அந்த மையம் சீக்கிரத்தில் செயல்பட ஆரம்பிக்க; சரியான சாலை வசதிகளற்ற நிலையிலிருக்கும் 19 மையங்களுக்குப் பிள்ளைகள் அனுதினமும் பாதுகாப்பாக சென்றுவர ஜீப் போன்ற 4 சக்கர வாகனகள் கிடைக்க ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### தபன்: R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** விசுவாசிகளுக்கான 7-வது ஆவிக்குரிய மாநாடு வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்துள்ளது. 3 கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் 400 பேர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். 75 வீடு சந்திப்புகளும், 4 கிராமங்களில் சுவிசேஷக் கூட்டங்களும் மிக ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளன. ஜெபத்தின்மூலம் நமது ஊழியருக்கு நல்லதொரு பாதுகாப்பான வீடு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மராரிபூர், மகிந்தர், தவோசி, போனஹார் ஆகிய ஆராதனை மையங்களிலுள்ள விசுவாசிகள் திருச்சபை வாசிகளாக வளர; சுவிசேஷத்தை எடுத்துச்செல்லும் ஊழியத்தில் வாலிபர்கள் தங்களின் ஈடுபாட்டை உற்சாகமாகக் காண்பிக்க ஜெபிப்போம்.

மே
17
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் T. Y. P.
திருமதி. உல்தாள் மேகி எஸ்தர் தாமஸ்
திருமதி. வசந்தி ஜெபக்குமார்
திருமதி. ஞான ஜெபஷீலா டேனியல் அருள்மணி
திரு. முதாவத்து ராஜு நாயக்

# அஸோம்

## கோகாமுக்:

**பிரவீன் தாஸ் & மார்கிரெட்**

**துதிக்க:** மொங்கல்சனும் அவரது மனைவி கஜேராவும் கிறிஸ்துவுக்குள் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டு, விசுவாசிகளாகியுள்ளனர். தனித்தாள் ஊழியம் மூலம் சுவிசேஷம் அநேகருக்கு எடுத்துரைக்கப்பட்டதில், 32 பேர் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டி வருகின்றனர். அவர்கள் மத்தியில் 15 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அன்ஸ்வர் & லில்லி, தாமஸ் தய், அவரது குடும்பம், ரய்னா மேதாக் மற்றும் அவரது குடும்பத்தினர் யாவரும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்யவும், அதற்கு எதிர்ப்புக் காட்டும் அவர்களது குடும்ப உறவினர்கள் கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட்டு இரட்சிக்கப்படவும்; சுவிசேஷ கைப்பிரதிகளைப் பெற்றுக்கொண்டுள்ள 285 பேர் தேவ வார்த்தையை விசுவாசிப்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய உள்ளங்களில் கிரியை செய்ய; குடிப்பழக்கத்திலிருந்து வெளியே வர முடியாமல் தவிக்கும் நமது புதிய தொடர்பாளர்களில் சிலருக்கு அதிலிருந்து மீள தேவ கிருபை கிடைக்க; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் கிறிஸ்துவை விசுவாசித்து சபைக்கு வரத் தொடங்க; நமது விசுவாசியான தர்மேஸ்வரிக்கு குடும்பத்தினர் மூலம் உண்டாகிற உபத்திரவங்களிலிருந்து அவர் தப்பிப் பிழைப்பதற்குப் போதுமான பெலனை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## மஜூலி:

**பாகிரதி பிசோயி & லால்மணி டிகல்**

**துதிக்க:** நமது சபை ஐக்கியத்தில் புதிதாக 4 குடும்பங்கள் வந்து பங்கேற்கத் தொடங்கியுள்ளனர். சிலக், ஷெரப்பா, பொர்கய்யா, சன்வால்காவ் மற்றும் பவுன்காவ் கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நொபய்ஷா, பொர்கய்யா, சன்வால்காவ் ஆகிய கிராம மக்கள் தேவ வார்த்தையின்மீது அதிக விருப்பம் காட்டி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வரும் ரீட்டா மிஸாங், புரொபினாபவ், கங்காதேவி ஆகியோர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நமது ஊழியத்தில் உதவிசெய்து வருகின்ற மிஷாரமாவின் குடும்பத்திற்காக; நொபய்ஷா, பொர்கய்யா மற்றும் சன்வால்காவ் கிராமங்களில் வாழும் பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவண்டை வர ஜெபிப்போம்.

மே 18 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ராஜம்மாள் ஜாண்சன்
திருமதி. எலிசபெத் சாலமோன், திரு. ஸ்டீபன் R.
செல்வி. கோன்கனி சந்திரிகாபேன் சாஹன்பாய்
திருமதி. பொற்செல்வி ஃபெலிக்ஸ் கமாலியேல்
திருமதி. ரீட்டாஞ்சலி கரடா ஹமுவேல் லிம்மா
திரு. முத்துக்குமார் M., திரு. கவித் ராகேஷ் ரத்திலால்
திருமதி. ஷீபா வெங்கடேஷ் வடார்
திருமதி. ஜான்சி ராணி யுவனேஷ்
திருமதி. சிங் கான் மாவி தங்வன்சங்

## சிலபதார்: கோண்ட் தேவு விஷ்ராம் & ராந்தே நய்னாபேன்

**துதிக்க:** தர்மன் மிலி கொழுப்பு கல்லீரல் பிரச்சினையிலிருந்தும், ரீனா மிலி 2 வருடங்களாக இருந்துவந்த ஒருபக்க கைவலியிலிருந்தும், தெரேசா டோலே மனவளர்ச்சியின்மையிலிருந்தும், திமேஷ்வர் பயாங் பக்கவாதத்திலிருந்தும் சுகமடைந்துள்ளனர். சாலையின் குறுக்கே வந்து இருசக்கர வாகனத்தில் சிக்கி அடிபட்ட மாடு 2 நாட்கள் கழித்து இறந்து போன அப்பெரும் விபத்திலிருந்து நமது விசுவாசி மகேஷ் மிலி அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். முக்தியார் கிராமத்தில் திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தை ஏறத்தாழ 15 பேர் கண்டு பயனடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தெரேசா டோலேயின் குடும்பத்தார் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பூஜா சேத்திரி மற்றும் பிரகாஷ் சேத்திரி தோல் ஒவ்வாமைப் பிரச்சினையிலிருந்து சுகமடைய; திமேஷ்வர் பயாங்கின் பெலவீனமான கால்கள் பெலனடைய; தனது மகளின் விசுவாசத்திற்கு ஊறு விளைவிக்கும் மோனிகா டோலேயின் தந்தை மனந்திரும்ப; மேசாக்கி & சீத்தல்மரி கிராம பெண் விசுவாசிகள் தாங்களாகவே நடத்தத் திட்டமிடும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளுக்காக; பிற மாநிலங்களில் பணிசெய்து கொண்டிருக்கும் நமது வாலிப விசுவாசிகள் பரிசுத்தமான வாழ்வு வாழ தேவ அனுக்கிரகம் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜோனை:

### சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா

**துதிக்க:** பலவித பெலவீனங்களிலிருந்து அனிதா பெகு, ராகேஷ் பெகு மற்றும் ஜோசப் டைடு சுகமடைந்துள்ளனர். தேவ கிருபையால் இவ்வருட ஞாயிறுப்பள்ளி வகுப்பிற்கான உபயோகப் பொருட்கள், கையேடுகள் யாவும் ஆயத்தமாக்கப்பட்டு, அவ்வகுப்பிற்கான ஆசிரியப்பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஜார்க்கண்டில் வைத்து நமது இயக்கத்தின் சார்பாக நல்லதொரு ஆவிக்குரிய கருத்தரங்கும், ஒரு உள்ளூர் தன்னார்வ ஊழியரைப் பயிற்றுவிக்கும் நிகழ்வும் சிறந்தமுறையில் நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 3 கிராமங்களில் முறையே நடத்தப்படவிருக்கும் மருத்துவமுகாம் ஊழியங்களுக்காக; சோடனத்தோ டோலே குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; கோபின் தாவ் தனது விசுவாசத்தில் உறுதியாக இருக்க; படி, காலி, பய்ரே ஜோனே, சில்லி, ஜினா மொமோரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் உருவாக; சிறுவர் மற்றும் வாலிபர் வேதாகம வகுப்புகளில் கலந்து கொள்பவர்களின் இரட்சிப்பிற்காக; மனச்சோர்பிலிருந்து ஒசாத் டோலே விடுபட; ஞாயிறுப்பள்ளி வகுப்பு ஆசிரியர் பயிற்சியில் கலந்து கொண்டோருக்காக; இப்பணித்தள விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; பிடியா, போர்பந்தா, தாகு, பாலி, லெய்மிகுரி, ஒக்காஜன், போர்முரியா, பன்பாரி, சிசா, ரங்கஜன், பட்டிமேதோக் ஆகிய இடங்களில் புதிதாக ஞாயிறு வேதாகமப்பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட ஜெபிப்போம்.

**மே 19 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜான்சி பாலாஜி G.

திரு. ஹேமந்த குமார் சபார்

# சத்தீஸ்கட்

## லுடேக்: கருணாகரன் & எலிசபெத்

**துதிக்க:** சுவிசேஷம் 23 கிராமங்களில் அறிவிக்கப்பட்டதின் விளைவாக 1754 பேர் முதன்முதலாக தேவ வார்த்தையைக் கேட்டுள்ளனர். 4 கிராமங்களில் வைத்து நடைபெற்ற பெண்கள் முகாம்களில் 65 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். நுரையீரல் சம்பந்தமான பெலவீனத்தினால் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜபால் சோய் அற்புத சுகமடைந்துள்ளார். அமர்பர்வா காசநோயிலிருந்து குண மடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாத நோயினிமித்தமாக கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித் திருக்கும் ஜந்தல் கக்கேட்டா இரட்சிக்கப் பட்டு சுகமடைய; சம்சாய், கர்மிளா மற்றும் புவனேஸ்வர் தங்களது பெலவீனங்களிலிருந்து சுகம் பெறவும், கிறிஸ்துவை விசுவாசிக்கவும்; ஜொகந்தர் & சுமிதா குழந்தை பாக்கியம் பெற; பின்மாற்றமடைந்திருக்கும் விசுவாசிகள் மீண்டும் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்து சேர; குடிப்பழக்கத்திற்கு அடிமை யாகி இருப்போரின் விடுதலைக்காக ஜெபிப்போம்.

# குஜராத்

## அஹ்வா:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின்

**துதிக்க:** தங்காடி கிராமத்தில் கிறிஸ்துவின் மந்தைக்குள் 6 புதிய விசுவாசிகள் இணைந்துள்ளனர். சிச்சினா கௌதா கிராமத்தில் வைத்து சபை மூப்பர் களுக்கும், உபதேசியார்களுக்குமான பயிற்சியொன்று முறையே நடத்தப் பட்டுள்ளது. வன்ஸ்தா பணித்தளத்தைச் சார்ந்த குக்குத்ரா, உத்மால் மற்றும் பர்கந்தியா கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. 2 வயது சிறுவன் சமீருக்கு கண்களுக்குள் வந்த கட்டி அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, அதற்கான கண்ணாடி வில்லை (lens) பாதுகாப்பான முறையில் பொருத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவுக்குள் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய இங்குள்ள மக்களுக்கிருக்கும் சமுதாய பயங்கள் நீங்க; இப்பணித்தளத்தில் மக்களைப் பாதிக்கும்வகையில் காணப்படும் ஒருவித இனம்புரியாத காய்ச்சல் மறைய; பற்பல கிராமங்களில் சுவிசேஷத்தைக் கொண்டுச்செல்லும்படி நடத்தத் திட்டமிட்டிருக்கின்ற தமாஷா நாடக நிகழ்ச்சிகள் அம்மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைய; சின்சுல் கிராமத்தில் ஜெபக்கூடுகையொன்று ஆரம்பிக்கப்பட; அடுத்தடுத்து ஏற்பட்டிருக்கும் கருச்சிதைவுகளினால் சோர்ந்துபோயிருக்கும் வர்கூனியா கிராம அருணாபேனுக்கு ஆரோக்கியமான குழந்தை செல்வங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

**மே 20 சனி**

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஸ்டான்லி ஜார்ஜ், திருமதி. எஸ்தர் எசக்கியா
திருமதி. ஞானலின் செல்வ விஜிலா சுந்தர்சிங்
திரு. மிர்ஜ்யோ கிஸ்கு, திரு. இளங்கோவன் S.
திருமதி. மினி தாமஸ், திரு. எட்வர்ட் ராஜதுரை R.

## போடேலி: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** மவேலி தெக்ரா கிராமத்தைச் சார்ந்த ராஜுபாயின் மனைவி விஷப் பாம்புக்கடியினால் பாதிக்கப்பட்டபோது, அருகிலேதும் மருத்துவ வசதிகள் இல்லாததால் விசுவாசத்துடன் எண்ணெய்பூசி ஜெபித்தபோது அற்புதமாக உயிர்த்தப்பிப் பிழைத்துள்ளார். சாராயம் காய்ச்சும் வழக்கில் தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிறையிலிருந்த நமது விசுவாசி விஜய்பாய் ஜாமீனில் வெளியே வரவும், அவ்வழக்கு ரத்து செய்யப்படவும் தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷ வசனத்தைக் கேட்டிருப்போர் அதற்கு இணக்கமாய் செவிசாய்க்க; அரசாங்க தேர்வுகள் எழுதியுள்ள பிள்ளைகளுக்கு நல்ல மதிப்பெண்கள் கிடைக்க; மானுபாய் மற்றும் லக்குபாய் குடும்பங்களில் மழலை பாக்கியங்கள் அருளப்பட; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஹர்ஷன்பாய், ஹேமா பாய், ஜீவ்லிபேன் ஆகியோர் அற்புத சுகம் பெற; அடிக்கடி தொந்தரவு செய்யும் மாக்னி கிராம காந்திபாயின் பக்கத்து வீட்டார் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## சூரத்: மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** புதிதாக சுவிசேஷத்தினால் ஒரு கிராமம் சந்திக்கப்பட்டுள்ளது. 2 வேதாகமங்களும், 3 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. சுபம் தேவ கிருபையால் சிற்சில காயங்களுடன் விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளார். செஜி இரு கருச்சிதைவுகளுக்குப்பின் தற்போது குழந்தை பாக்கியம் பெற்றுள்ளார். மத்தியப் பிரதேசத்திலிருந்து புலம்பெயர்ந்து வந்துள்ள ராஜுபாய் நினம்மாவிற்கு டிராக்டர் வாங்கும் சிலாக்கியம் கிடைத்துள்ளது. மோகித்தின் தந்தை தொழிலினிமித்தமாக சவுதி செல்ல விசா கிடைக்கப் பெற்றுள்ளார். அஞ்சுபேனின் மைத்துனருக்கு புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை நல்லமுறையில் செய்யப்பட்டுள்ளது. சுஜித் கால்வீக்கம் மற்றும் அதன் கடும் வலியிலிருந்தும், லக்ஷ்மி நரம்பு துண்டிக்கப்பட்ட பாதிப்பிலிருந்தும், ஸ்ரீகாந்த் & மம்தாபேனின் குடும்பம் தீய ஆவியின் பிடியிலிருந்தும் சுகவிடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சைலேஷ், கிஷான், அவினாஷ் மற்றும் சுபம் வால்விக்கு நல்ல வேலைகள் கிடைக்க; சுவிசேஷத்தை முதன்முதலாகக் கேட்டிருக்கும் 22 புதியவர்கள் அதற்குச் செவிகொடுக்க; ராம்பாயின் உடல் நலம் தேறி, குழந்தை பாக்கியம் பெற; கர்ப்பிணியான நிஷா சுஜித்திற்கு அடிக்கடி ஏற்படும் வயிற்றுவலியிலிருந்து நல்ல நிவாரணம் கிடைக்க; ரேகாபேனின் மகன் பவனிற்கு மனநிலை பாதிப்பிலிருந்தும், குடிப்பழக்கத்திலிருந்தும் சுகவிடுதலை கிடைக்க; ஒடிசாவில் ஊழியம் செய்துவரும் அனிதாபேனின் சகோதரர் மனோகரின் ஊழியத்திற்கு இடையூறு உண்டுபண்ணும் அவரது மனைவி ஜெயந்தி மனந்திரும்ப; சிறிய முகக்கட்டியினால் அவதிப்படும் நினேஷ்பாய் மற்றும் நடக்கமுடியாமல் கஷ்டப்படும் ராஜுபாய் நினம்மாவிற்கு முழுசுகம் கிடைக்கவும், அவர்கள் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

**மே 21 ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயராணி ஆல்பின்

## சொரம்பா:

### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன் மூலம் 52 பேர் முதன்முதலாகச் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். ஜெபத்தின்மூலம் தேவிபேனும், நந்துவும் தங்களது பெலவீனங்களிலிருந்து சுகமடைந்துள்ளனர். தீராத வயிற்று வலியினால் கஷ்டப்பட்டு வந்த தனது தந்தைக்குக் கிடைத்த அற்புத சுகத்தினால் சுனித்ராபேன் கிரமமாக ஆலயம் வரத் தொடங்கியுள்ளார். சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டிவந்த சின்னாவும் ஜிக்னேஷும் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்கே படிப்பறிவில்லாத ஜனங்கள் அதிகமிருப்பதினால் வேத வசனங்களை அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதில் தேவ ஞானம் விளங்கவும், அவர்கள் அவ்வசனங்களின்படி புரிந்து நடப்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசை நிறைவாய் கிடைக்கவும்; மாந்திரீகம் மற்றும் பிறமத வழிபாடுகளை விட்டு வெளியேறி, நமது ஆராதனைக்குத் தொடர்ச்சியாக வர ஆரம்பித்துள்ள தர்மேஷ் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; அஜித் புற்றுநோயிலிருந்தும், பிரதிக்ஷாபேன் இரத்தணு மற்றும் இரத்தசோகை பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; புஷ்ஹாபேன் மற்றும் ரவிதாபேன் குழந்தை பாக்கியங்கள் பெற; 3 ஆலயங்களில் கட்டிட சீரமைப்புப்பணிகள் நடைபெறவும், ஆலயம் கட்டுவதற்கான ஒரு நிலம் நமது இயக்கத்தின் பெயரில் விரைவில் பதிவு செய்யப்படவும் ஜெபிப்போம்.

## ஃபோக்டி - தலைமைத்துவப் பயிற்சி மையம்:

### ரூபன் ரவி & விஜயராணி

**துதிக்க:** சுதேச ஊழியர் குடும்பங்களின் ஆவிக்குரிய வாழ்விற்கான கூடுகைகள் காந்தேஷ் மற்றும் சித்தாரா பிராந்தியங்களில் சிறந்த முறையில் நடந்து முடிந்துள்ளன. ஒருநாள் சமிதி கூடுகை சாத்புடா பிராந்தியத்தில் ஆசீர்வாதமான முறையில் நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது அரசாங்கத் தேர்வுகளை எழுதி முடித்து விடுமுறைக்காக வீடுகளுக்குச் சென்றுள்ள நமது ஃபோக்டி விடுதிப்பிள்ளைகளுக்காக; ஏற்கனவே நமது தலைமைத்துவ பயிற்சி மையத்தில் சமையல்பணி செய்துகொண்டிருந்த ரமேஷ்பாயின் குடும்பம் தற்போது பணித்தளப் பகுதிக்குச் சென்று பணியாற்ற விருப்பதினால், இவ்விடத்திற்கு சமையல் பணி செய்ய தகுந்த பணியாளர் கிடைக்க ஜெபிப்போம்.

## மே 22 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெயசேகர் P.T.
திரு. சுனில் தத்தா காரா
திரு. பிபின் பிஹாரி பிரதான்
திரு. சாமுவேல் R.

### பிப்பள்வாடா சிறுமியர் விடுதி:
**பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா**

**துதிக்க:** இங்குள்ள 10 மற்றும் 12-ம் வகுப்புகள் படிக்கும் பிள்ளைகள் தங்களது தேர்வுகளை நல்ல முறையில் எழுதி முடித்துள்ளனர். குழாய்கள் செப்பனிடும்பணி மற்றும் குப்பை கழிவுகள் அகற்றும்பணி யாவும் சிறந்தமுறையில் நடைபெற்று முடிந்துள்ளன. தங்களது பள்ளி இறுதி யாண்டை முடித்து வெளியேறும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான பிரியா விடை மற்றும் நன்றிகூறும் விழா இனிதே நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருத்தப்பட வேண்டிய விடைத்தாள்கள் நல்லமுறையில் மதிப்பீடு செய்யப்பட தேவ அனுக்கிரகம் கிடைக்க; கல்லூரிப் படிப்பிற்கு கடந்து செல்லும் இப்பிள்ளைகளின் வாழ்வில் தேவ திட்டம் நிறைவேற; மருத்துவப் படிப்பிற்கான நுழைவுத்தேர்வு எழுத ஆயத்தமாகும் பிள்ளைகளுக்காக; இங்குள்ள ஆசிரியர்களுக்கான தங்குமிடங்கள் மழைக்காலத்திற்கு முன்பாகச் சீராகக் கட்டப்பட ஜெபிப்போம்.

### மோஸ்தா:
**பால்ராஜ் R. & கோயில்புஷ்பம்**

**துதிக்க:** சுவிசேஷம் புதிதாக 6 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டதின் மூலம் 460 பேர் சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். 10 புதியவர்கள் கிறிஸ்துவின் மந்தையில் தஞ்சமடைந் துள்ளனர். 2 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. மொக்ரான் கிராம சபை மூப்பர் பீம்சிங் அதிக காய்ச்சலினால் குழியில் மயங்கி விழுந்த ஆபத்தினின்றும், முகேஷ்பாய் சாலை விபத்தினின்றும், பாரத்பாய் தன் கண்களில் பெரிய மரக்கிளை குத்திய விபத்தினின்றும் தேவ தயவால் காப்பாற்றப்பட்டுள்ளனர். தப்கா ஆலய மூப்பரின் வாழ்வைப் பாம்புகடியிலிருந்து தேவன் விடுவித்து காத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தெக்வாடா சபை மூப்பரின் மனைவிக்கு பிரசவ நேரத்தில் செய்த அறுவை சிகிச்சையில் ஏற்பட்ட சிக்கலில் குழந்தை இறந்து பிறந்ததினால், அச்சிக்கலை தவிர்ப்பதற்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கும் அவர் விரைவில் ஆறுதலடைந்து உடல்நலம் தேறி ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க; 12 வயது பிள்ளையான காரா இரத்தசோகைப் பிரச்சினையிலிருந்தும், வசந்தாபேன் வயிற்றுக்கட்டிப் பிரச்சினையிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## மே 23 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கண்ணுசாமி தாமஸ்
திரு. விஜய் பாபு S.
திரு. கோபிகிருஷ்ணன் M.

### தபோய்:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** தேவ கிருபையால் மஞ்சுளா பேன் தனது விவசாயப் பண்ணையில் நுழைந்த புலியிடமிருந்து தப்பி யுள்ளார். சூடான தண்ணீர் இருந்த குடுவைக்குள் விழுந்த 7 வயது சிறுமி சோனாலிபேன் பெரிதளவு காயங்க ளின்றி தப்பிப்பிழைத்துள்ளார். நமது கொத்தார் கிராம தன்னார்வ ஊழியரான திலீப் ஊழியத்தில் உற்சாக மாகச் செயல்பட்டு வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறான போதனையினால் விசுவாசத்தை விட்டு பரத் விலகிப்போகாம லிருக்க; ஓராண்டு சபை திட்டக்கூடுகை மற்றும் தரிசனக்கூடுகையில் சபை மூப்பர்களிடையே ஒருமனப்பாடு காணப்படவும், சபை ஊழியத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை அவர்கள் சீராக முன்வைக்கவும்; அதிலும் கோவிட் ஊரடங்கிற்குப்பின் மீண்டும் செயல்பாட்டிற்குள் வரும் கந்தியாகுவா கிராமத்தில் வைத்து இக்கூடுகை நடைபெறவிருப்பதினால், அங்கு சுமூக மான காலச்சூழ்நிலை அமைய; பின் மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

**சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தைக்குள் 7 புதிய விசுவாசிகள் அடியெடுத்து வைத்துள்ளனர். 487 நபர்கள் சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேட்டறிந்துள்ளனர். 6 கிராமங்களில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் நடத்தப் பட்டுள்ளன. இங்குள்ள 44 திருச் சபைகளிலும் ஞாயிறு ஆராதனைகள் வாரந்தோறும் வெகு நேர்த்தியாக நடைபெற்று வருகின்றன. நமது விசுவாசிகள் மருத்துவமனையி லிருக்கும் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்காக ஜெபித்து வருகின்றனர். ஜெபத்தின் மூலம் ஜான்சிபாய் தனக்கு ஏற்பட்ட பக்கவாதப் பிரச்சினையிலிருந்து சுகம் பெற்றுள்ளார். கோர்தி மற்றும் வல் சோந்த் கிராமங்களில் கட்டப்பட்டுவரும் ஆலயக்கட்டுமானப் பணிகள் நிறைவு நிலைக்கு வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வினோத்பாய், ரானாபாய் மற்றும் ராஜேஷ்பாய் சபை ஆராதனை களில் ஒழுங்காக வந்து கலந்துகொள்ள; தோத்பாலியா கிராம தமேஷ்பாய் தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்து சுகம் பெற; சில்லிபதாக் கிராம தேஜல்பேன் மனவளர்ச்சின்மையிலிருந்து அற்புத சுகமடைய; ஜெசிந்தா பேனிற்கு மழலைப்பாக்கியங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## மே 24 புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வேதமாணிக்கம் அப்பாதுரை N.

### ராண்தா விடுதி:

**மர்குஸ் மால்தோ & சாரா; சந்திரிகாபேன், மனிஷா லக்ரா**

**துதிக்க:** குஜராத்தி மொழி வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு 22 குஜராத்தி மொழி வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வய்தன்பேன், நகல்பேன் மற்றும் ஆயிஷிபேன் அம்மைநோயிலிருந்து சுகமடைந்துள்ளனர். 6 குழுக்களாகப் பங்கேற்ற 64 பிள்ளைகளிடையே வேதாகம வினாவிடை போட்டி சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளது. அங்குஷ்பாய் மற்றும் வினய்பாய் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட வேதாகம வினாவிடை போட்டியில் 3-ம் பரிசைப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிள்ளைகள் மத்தியில் பணிசெய்ய உண்மையுள்ள நல்லதொரு சமையற்காரர் குடும்பமும், ஒரு விடுதிக்காப்பளரும் கிடைக்க; 10,12-ம் வகுப்பு மாணவர்கள் தங்கள் தேர்வுகளில் நற்தேர்ச்சிப் பெற; பிள்ளைகளின் ஆவி, ஆத்தும, சரீர நல் வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### ஜிம்மலாகட்டா:

**ஸ்ரீனிவாசா & சுனிதா**

**துதிக்க:** ஊழியப் பின்தொடர்ப்பணிகள் 27 கிராமங்களில் முறையே நடந்து முடிந்துள்ளன. விசுவாசி மௌனிகாவின் தாயார் தனது சரீரத்தில் வந்த கட்டிகளுடைய வலியினிமித்தம் நமது ஞாயிறு ஆராதனைகளில் பங்கேற்கத் தொடங்கியபோது, விசுவாசிகள் யாவரும் கூடி ஜெபித்து அவருக்கு அற்புத சுகம் கிடைத்துள்ளது. உயரமான பனைமரத்திலிருந்து தவறி கீழே விழுந்து மரிக்கும் தருவாயில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த விசுவாசி ஷோபாவின் தந்தைக்காக சபை மக்கள் ஜெபித்தபோது, தேவன் மீண்டும் அவருக்கு புதுவாழ்வைத் தந்துள்ளார். 7 வயது சிறுமி கிரண் தனது முதுகில் ஏற்பட்ட தீ காயங்களிலிருந்து ஜெபத்தின்மூலம் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எரகடா கிராமத்தில் கட்டப்பட்டுவரும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் நிறைவடைய; சுவிசேஷத்தை வாஞ்சிக்கும் திரளான மக்கள் தங்களது குடும்பத்தாரோடு இயேசுவை விசுவாசித்து அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி தூய ஆவியானவர் அவர்களை வழிநடத்த; மாந்திரீக செயல்பாடுகளில் சிக்கிக்கொண்டு, தற்போது நமது ஆராதனையில் புதிதாக வந்து கலந்துகொள்ளும் ரஜிதா அத்தீய செயல்பாடுகளிலிருந்து விடுபட; சுதாகர் மற்றும் கவுரய்யா தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற; தனது மனைவியால் புறக்கணித்து தள்ளப்பட்டு, தன்னுடைய சிறுவயது மகளுடன் வேதனையோடு வாழ்ந்துவரும் மல்லேஷுடன் அவருடைய மனைவி மனம் பொருந்திச் சேர்ந்து வாழ; சுரேகாவிற்கு சரீரத்தில் வரும் சிறிய சிறிய கட்டிகளிலிருந்து பூரண சுகம் கிடைக்க; திலீப் & லக்ஷ்மி, சந்தோஷ் & வெங்கடம்மா, வெங்கட்டி குமாரியின் குடும்பம், சுகுமார் & மாதுரி ஆகியோருக்கு மழலைபாக்கியங்கள் கிடைக்க; மொர்ப்பள்ளி, சிரப்பள்ளி, எரகடா, பெர்காபட்டி, தர்ஷவாடா, டச்சிலிபெட்டா மற்றும் உமனூர் கிராமங்களிலுள்ள திருச்சபையினர் ஆவிக்குரிய வாழ்வில் பலப்பட ஜெபிப்போம்.

**மே**
**25**
**வியாழன்**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஃப்ரீடா பேபி எட்வர்ட் சாம்
திருமதி. ராஜரத்னம் ஆபிரகாம், திரு. கின்ஸ்லி A.R.
திருமதி. கிறிஸ்டா ரவிக்குமார்
திருமதி. ஷைலா குப்புசுவாமி

## காண்ட்பாரா & நவாபூர்: பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி எடுத்துரைக்கப்பட்ட தினிமித்தம் அங்கே 2100 பேர் சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். 3 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 45 புதிய ஏற்பாடு களும், 4 வேதாகமங்களும் கொடுக்கப் பட்டுள்ளன. ஜாம்தா, நவகோன், கடக்கிபாடா ஆகிய திருச்சபைகளில் 8 சிறிய ஜெபக்குழுக்கள் உருவாகியுள்ளன. டோங்கு ஆலயவளாகச் சுற்றுச்சுவர் நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 4 புதிய குடும்பங்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். தொழிலினிமித்தமாக பிற இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றிருந்த நமது விசுவாசிகள் சுகத்துடன் வீடு திரும்பியுள்ளனர். ஜாம்தாவில் வைத்து நடைபெற்ற தரிசனக்கூடுகையில் 200 விசுவாசிகள் கலந்துகொண்டதில் அநேகர் தனது சமூக மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தங்களது வாழ்வை அர்ப்பணித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கவிதா, குந்தா, பிரேம்லதா, திலுபேன், நிர்மலா மற்றும் சுனிதாவின் கணவர் இரட்சிக்கப்பட; 8 கிராமங்களில் விசுவாசிகளுக்காகவும், 7 கிராமங்களில் கிறிஸ்துவை அறியாதவர்களுக்காகவும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்கள் நன்மையாய் விளங்க; பில்லிபாடா மற்றும் பெத்கிகோன் கிராமங்களில் ஜெபக்கூட்டங்கள் நடத்த திறந்தவாசல் கிடைக்க; எல்லா திருச் சபைகளிலும் பெண்கள் சுவிசேஷக்குழு ஆரம்பிக்கப்பட; வாலிபர்கள் மத்தியில் இணையதள ஜெப ஐக்கியம் உருவாக; கிறிஸ்தவர்களுக்குக் குறிப்பாக டோங் கிராம விசுவாசிகளுக்கு எதிராகச் செயல்படும் குக்னா சமுதாயத்தினர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## *ஓர் ஜெப விண்ணப்பம்!*

*குஜராத், சூரத் பணித்தளத்திலுள்ள கௌதம் நகர் ஆலயம் அங்குள்ள சேரிப்பகுதியில் கட்டப்பட்டுள்ளது. சூரத் மாநகராட்சி அதிகாரிகள் அப்பகுதியைத் துப்புரவு செய்யத் தீர்மானித்து, ஆராதனைக்கு மாற்று இடம் கண்டுபிடிக்குமாறு கூறினர். அதனால் 2006-ல் ஒரு நிலம் வாங்கி, ஆலயம் கட்டப்பட்டுவந்த நிலையில் அங்கு நிலப்பிரச்சினை உருவாகி, எதிர்ப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவ்வாலயம் பாதியி லேயே இடிக்கப்பட்டுவிட்டது. ஆனால், பழைய ஆலயம் பாதிப்பில்லாமல் இருந்ததால், அதைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால், தற்போது மீண்டும் மாநகராட்சியினர் அங்குள்ள சாலைகளை விரிவுப்படுத்த முயலும் திட்டத்தில் நமது ஆலயத்தின் இருப்பு அப்பகுதியின் நடுவில் அமைந்திருப்பதால், அதையும் இடிக்கத் திட்டமிட்டுள்ளனர். இச்செய்தி அதிகாரப்பூர்வமாக இன்னும் அறிவிக்கப்படா விட்டாலும், எதிர்ப்புகாட்டும் மக்கள் தொடர்ந்து அச்சுறுத்தி ஆராதனையைத் தடை செய்து வருகின்றனர். ஆலயத்திற்கு மாற்று இடம் கொடுக்கு மாறு நமது மிஷனரிகள் அதற்குரிய அதிகாரிகளிடம் மனு கொடுத்துள்ளனர். அதன் சம்பந்தமாக ஒரு கட்டிடப் பொறியாளரைச் சந்தித்தபோது அவர் கோபத்துடன், 'மாற்றிடம் ஒன்றும் தரமுடியாது; நிலம் வாங்கி வேறு ஆலயம் கட்டுங்கள்!' என்றுகூறி, தற்சமயம் பயன்படுத்தும் ஆலயத்தைக் காலி செய்து விடுமாறு கூறிவிட்டார். நமது மிஷனரிகள் அங்குள்ள முக்லிசாரா மாநகராட்சி அதிகாரி மற்றும் நகர கட்டிடப் பொறியாளரைச் சந்தித்து, அவர்களிடமும் இம்மனு வின் நகல்களைச் சமர்ப்பித்துள்ளனர். இதுவரை எவ்வித பதிலுமில்லை. சூரத் மாநகராட்சியில் பணிபுரியும் நமது வட இந்திய விசுவாசிகளின் ஆலோசனைகளின்படி தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். கர்த்தர் தாமே அந்த அதிகாரிகளின் உள்ளங்களில் கிரியை செய்ய ஜெபிப்போம்.*

**மே 26 வெள்ளி**

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லீலாபாய் ஜாண் பெர்லின்
திருமதி. சிசிலி ஞானம் ராஜ்குமாரி அருமைநாயகம்
திருமதி. மைக்கேல் ஜாண் சாமுவேல்
திருமதி. ஜெபலா விஜயகுமார், திரு. பாபுராஜ் K.
திருமதி. ஹெப்சி செல்வம் தவமணி
திருமதி. தும்படா ரசிலாபேன் ராமுபாய்
திரு. டேனியல் ராஜாமணி S.

## எட்டப்பள்ளி: வசாவே அர்விந்த் காலுசிங் & வால்வி எஜு

**துதிக்க:** புஸ்கி கிராமத்தில் புதிய விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகையும், பந்தேவாஹ் கிராமத்தில் விசுவாசிகள் மற்றும் சபை மூப்பர்களுக்கான முகாம் களும், எட்டப்பள்ளி கிராமத்தில் விசுவாசி களுக்கான பயிற்சிக்கூடுகையும் ஆசீர்வாதமான முறைகளில் நடைபெற்று முடிந்துள்ளன. கெதரியா மற்றும் கோட்மி பகுதிகளில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் பெரிதளவில் நடந்து முடிந்துள்ளன. 9 இடங்களில் முழுஇரவு ஜெபக்கூடுகைகள் பயனுள்ள விதங்களில் நடத்தப்பட்டுள்ளன. கெத்ரி கிராமத்திலிருந்து கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கும் விருப்பத்துடன் சாது ஹிடோவின் குடும்பத்தினர் நமது ஆலயத் திற்குப் புதிதாக வர ஆரம்பித்துள்ளனர். இப்பணித்தளத்திலுள்ள ஜீவன்கட்டா கிராமத்தில் வைத்து நடைபெற்ற விசுவாசி களுக்கான ஆவிக்குரிய பெருவிழா, அதில் கலந்துகொண்டோருக்கு மிக ஆசீர்வாதமாக இருந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புன்னிபாய் மஹா இரத்தப்புற்று நோயிலிருந்தும், சின்னிபாய் ஒடே மற்றும் சின்னிபாய் கொட்டா பக்கவாதத்திலிருந்தும், புதிய விசுவாசியான கெத்ரி கிராம சாது ஹிடோ தீய ஆவியின் பிடியிலிருந்தும் முழு சுகவிடுதலை பெற; சுவிசேஷத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கதவாடா கிராமத்தில் மிகுந்த பொருளாதார தேவையோடு இருக்கும் பன்து மஹாவின் தேவைகள் யாவும் கிருபையாகச் சந்திக்கப்பட; நமது ஊழியங்களில் ஈடுபாடு கொண்டுள்ள ஆதிவாசி இன சபைத்தலைவர்களின் பாதுகாப்புக்காக; கிறிஸ்துவை வெளியரங்கமாக அறிக்கையிட முடியாமல் மக்களிடையே காணப்படும் சமுதாய பயங்கள் நீங்க; பல கிராமங்களில் காணப்படும் எதிர்ப்புகளினிமித்தம் அங்குள்ள கிராமத்தலைவர்களால் விசுவாசத்தைக் கைவிட வலியுறுத்தப்படும் நமது விசுவாசிகள் ஸ்திர தன்மையுடன் தங்களது விசுவாசத்தில் நிலைத்து நிற்க; கிறிஸ்தவத்தைப் பரவவிடாமல் தடுப்பதற்கென திட்டமிட்டு கூட்டங்களை நடத்தும் கிராமத்தலைவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## *இயேசு என் பரிகாரி!*

*மத்தியப்பிரதேசம், நேப்பா நகர் பணித்தளம். சிடியமால் கிராம விசுவாசியொருவரின் தந்தையான 75 வயது ராமு பாபாவின் கன்னத்தில் ஒரு பெரிய புண் இருந்தது. அதைப் பரிசோதித்த மருத்துவர் புற்றுநோயெனக் கூறினார். ஏற்கனவே தனது குடும்பத்தில் ஒருவர் புற்றுநோயினால் மரித்துப்போயிருந்ததை நினைத்து ராமு பாபா மிக கலங்கினார். அவரது மகனும் மருமகளும் நமது ஆழ்ந்த விசுவாசிகள். ராமுபாபா சற்று மேலோட்டமான விசுவாசம் கொண்டவர். ஆனால், இம்முக்கிய கட்டத்தில் வேறுவழியின்றி கிறிஸ்துவின்மீது தன் முழுவிசுவாசத்தையும் வைத்து, தொடர்ந்து ஜெபித்து வந்தார். என்ன அதிசயம்! தேவ கிருபையால் அவர் முழுசுகமடைந்தார். தற்போது அவர் தனது மனைவியோடு கூட தனக்குச் சுகம் தந்த பரிகாரியாகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். அல்லேலூயா!*

## மே 27 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சைரஸ் சாமுவேல், திரு. ஜோசப் துரைராஜ் P.
திருமதி. ரெபெக்காள் ஞானம் சார்லஸ் செல்லகுமார்
திருமதி. அருள்மேரி அன்பையா
திரு. சாமுவேல் ஜெபகுமார் A.
திருமதி. மாயா சூசன் சுனில் K. மேத்யூ
திரு. எலிஷா தய்மி, திரு. டேவிட் R.

### பிம்பள்நேர்: மூர்த்தி & பாரதி

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தையில் புதிதாக 4 விசுவாசிகள் இணைந்துள்ளனர். 600 பேர் முதல்முறையாகச் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். தொழிலினிமித்தமாக பிற மாநிலங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றிருந்த நமது விசுவாசிகள் சுகநலத்துடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். தனது கையில் வந்திருந்த கட்டியிலிருந்து சுனிதாபாய் பூரண குணமடைந்துள்ளார். ரோகத் கிராமத்தில் திரையிடப்பட்ட இயேசுத்திரைப்பட காட்சிகளை அங்குள்ள அநேக புதிய மக்கள் மிகுந்த ஆர்வமுடன் பார்த்துச் சென்றுள்ளமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனது இடது கால், கை வீக்கத்திற்காக பல மந்திரவாதிகளையும் மருந்துகளையும் பயன்படுத்தி பலனற்றுப் போன நிலையில், தற்போது நமது ஊழியர்கள் சரீர சுகத்திற்காக நடத்தும் கூடுகைகளில் வாஞ்சையுடன் வந்து பங்கேற்கும் விஜய்பூர் கிராம லாலு டாடாவிற்காக; குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துக்கொண்டிருக்கும் சின்சினாபாடா கிராம ஆஷாபாயின் ஜெபம் கேட்கப்பட; விஜய்பூர் சபையில் இணையவிருக்கும் 10 பேரின் ஆவிக்குரிய மனநிலைக்காக; ரோகத் கிராமத்திலிருந்து நமது ஆராதனைக்குப் புதிதாக வருகை தருகின்ற சிட்டிபாய் குடும்பத்தினர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### தலாசரி:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** பாகிபாடா, தொடிபாடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருவர் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். கந்தர்வாடி கிராமத்தில் நடந்த மூப்பர்கள் பயிற்சி நிகழ்ச்சி மூலம் 12 மூப்பர்கள் தேவ வார்த்தையைக் கற்றறிந்துள்ளனர். ராய்பூர் கிராமத்தில் வைத்து நடைபெற்ற 2 நாட்கள் பெண்கள் பயிற்சிக்கூடுகையில் 40 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். கத்கோனி கிராமத்திலுள்ள திவா, மோரேஷ்வர், பொர்த்தலோஸ் மற்றும் அத்தானே கிராமத்திலுள்ள சஞ்சீப் பாண்டு ஆகிய 4 குடும்பங்கள் புதிதாக நமது ஊழியத்தில் தொடர்பாளர்களாகக் கிடைத்துள்ளனர். பட்டில்பாடா பாப்புகோன் கிராம நமது விசுவாசி வனிதா ஜெபத்தின் மூலம் மனநிலை பாதிப்பிலிருந்து சுகமடைந்ததால், ஸ்தோத்திரக்கூடுகையாக தனது வீட்டில் ஒரு ஜெபக்கூடுகையை ஒழுங்கு செய்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள பாகிபாடா மற்றும் தொகிபாடா கிராமங்களில் மேலும் ஊழியம் செய்வதற்கான வாசல்கள் திறக்கப்பட; சபை மூப்பர்களும் மற்றும் விசுவாசிகளும் ஆவிக்குரிய எழுச்சிப் பெற; வாலிபர்கள் தங்களது விசுவாசத்தில் உறுதியாக வளர; இம்மாதம் முழுவதும் ஊழியப்பாதையில் தேவனுடைய பாதுகாவலும், வழிநடத்துதலும் பூரணமாய் கிடைக்க ஜெபிப்போம்.

மே 28 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சாந்தம் டேவிட் போண்டிங்
திருமதி. ஜெயசெல்வி மணிமாறன்
திரு. பப்லு பரசேத்

# கர்நாடகா

## கோலார் பிராந்தியம்:

**திம்மேஷ் & கவிதா**

**துதிக்க:** தேவ வார்த்தை 150 புதியவர்களுக்குச் சுவிசேஷமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 2 புதிய நபர்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். சபை மூப்பர்களுக்கான வேதாகமப்பயிற்சி, வேதாகம வகுப்புகள் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் யாவும் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடந்தேறியுள்ளன. தனது கிராமத்தில் தன் குடும்பம் மாத்திரமே கிறிஸ்தவர்களாகியிருக்கும் சூழ்நிலையில் மரணமடைந்திருக்கும் எல்லம்மாவை அவரது விருப்பப்படி கிறிஸ்தவ முறையில் சமாதானமாய் அடக்கம் செய்ய தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஏதுகரமற்ற சூழ்நிலைகளிலும் நமது விசுவாசிகள் யாவரும் தங்களுடைய விசுவாசத்தில் ஸ்திர தன்மையுடன் காணப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள எல்லம்மாவின் குடும்பத்தினர் யாவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; மாந்திரீகத்திற்கு அநேக மக்கள் அடிமையாகிப் போவதால், அத்தீயச் செயல்பாடு முற்றிலுமாய் மறைந்து போக; முனியப்பா மாந்திரீக கட்டுகளிலிருந்து விடுபட்டு, நன்றாக நடக்க ஆரம்பிக்க ஜெபிப்போம்.

## மாலூர்:

**ஃப்ரான்சிஸ் துரைசாமி & ஜெயந்தி, கிஷாந்த் லிமா & பிரமிளா சிங்**

**துதிக்க:** 4 கிராமங்களிலுள்ள 300 பேருக்கு சுவிசேஷம் முதன்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசிகளின் மூலமாகவே அவர்களுடைய உறவினர்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டு வருகின்றனர். ஆலம்பாடி சபை மக்கள் காணாமல் போயிருந்த நமது விசுவாசியொருவரின் உறவினருக்காக ஜெபித்தபோது, அவர் மீண்டும் சுகபத்திரமாய் வீடு திரும்பியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது உள்ளூர் பகுதி மக்களுடன் ஐக்கியம் கொண்டு, அவர்கள் மத்தியில் சுவிசேஷத்தை ஜெபத்துடன் பகர்ந்து வரும் நமது விசுவாசிகளுக்காக; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி ஆலயத்திற்கு வராமலிருக்கும் நமது விசுவாசிகளின் மகன்கள் அப்பழக்கத்திலிருந்து விடுபடவும், தங்களது குடும்பத்தினர் ஆலயம் செல்வதைத் தடை செய்யாமல் தாங்களும் அவர்களோடு இணைந்து ஆலய ஆராதனைகளில் பங்கேற்கவும்; இப்பணித்தள சபை விசுவாசிகள் ஒழுங்காக ஆலயத்திற்கு வந்து, ஊழியச் செயல்பாடுகளில் உற்சாகமாக ஈடுபட ஜெபிப்போம்.

## மே 29 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷக்கீனா க்ருபா ரக்ஷனா பரே

திரு. இம்மானுவேல் S.

### வேமகல்: பால் சம்பத் & ராஜம்

**துதிக்க:** சபை மூப்பர்களுக்கான பயிற்சி மற்றும் விசுவாசிகளுக்கான முகாம் யாவும் சிறந்த முறையில் நடைபெற்று முடிந்துள்ளன. வேலைக்குப் போக மனதில்லாமல் வீட்டைவிட்டு வெளியேறிய முனியம்மாவின் மகன் அதிக நாள் ஜெபத் திற்குப் பின் மீண்டும் வீடு திரும்பியுள்ளார். அனைத்து தெய்வங்களும் ஒன்றுதான் என்று கூறி விக்கிரகத்திற்குப் படைத்த திண்பண்டங்களைத் தனது ஆசிரியர் கொடுத்தபோது, அதை வாங்க மறுத்த புவந்தாவின் உறுதியான விசுவாசத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திரளான புதிய நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைய; கெஞ்சப்பாவிற்கு தனது கால் வீக்கத்தி லிருந்து சுகம் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஊழியங்களில் ஆவிக்குரிய ஆசீர்வாதம் மிகுந்து காணப்பட ஜெபிப்போம்.

### ஸ்ரீனிவாசபுரா:

### சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 3 கிராமங்கள் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளன. அத்துடன் 250 புதிய தொடர்பாளர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர். டிராக்டரிலிருந்து தவறி கீழே விழுந்த விபத்திலிருந்து கிருஷ்ணப்பா உயிர்த்தப்பிப் பிழைத்துள்ளார். பிறரோடு இணைந்து தோட்ட வியாபாரம் செய்தபோது கிடைத்த இலாபத்தைக் காட்டிலும், தனித்து நின்று செய்யும்போது அஞ்சப்பா தேவ கிருபையால் அதிக இலாபத்தைப் பெற்று வருகிறார். ஒவ்வொரு மாதமும் அநேக புதிய நபர்களை தேவன் சபையில் இணைத்துக்கொண்டு வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாகச் சபைக்கு வர ஆரம்பித்துள்ளோர் கிரமமாக ஆலய ஆராதனைகளில் பங்கேற்க; சொத்து விவகாரத்தில் பிறரால் வஞ்சிக்கப்பட்டு, தனது வழக்கை உயர்நீதி மன்றத்தில் தொடுக்க பணமின்றி தவிக்கும் சரோஜாம்மாவிற்கு நீதி கிடைக்க; சுவிசேஷத்தைக் கடுமையாக எதிர்த்துவரும் கொலத்தூர் கிராம மக்களி டையே அடுத்தடுத்து ஏற்படும் மரணங்களின் காரணங்களை மக்கள் அறிந்துணர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அத்தகைய மரண சாபங்களிலிருந்து விடுதலை பெற; ஊழியத்தைத் தடைசெய்ய காவல் நிலையத்திற்குச் சென்று முறையிடும் இப்பகுதி உள்ளூர் மக்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### கூடாதது ஒன்றுமில்லை!

*ராஜஸ்தான், கோர்வாடா பணித்தளம். பல்வாடா கிராம 21 வயது வாலிபன் ராமு இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, சுகம் பெற கடந்த 2 வருடங்களாக தனது பெற்றோர் களுடன் முயற்சி செய்யாத மாந்திரீகமோ, ஆன்மீகமோ, மருத்துவமோ இல்லை. ஆயினும், சுகம் பெறாத நிலையில் அவருடைய மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் வடியத் தொடங்கியது. இதைக் குறித்து கேள்விப்பட்ட நமது மிஷனரிகள் அவருடைய வீட்டிற்குச் சென்று ஜெபித்து, அக்குடும்பத்தாரை இயேசுவை நம்பி ஜெபிக்குமாறு சபைக்கு அழைத்தனர். அவர்களும் அவ்வாறே நம்பி நமது ஆராதனையில் தொடர்ச்சியாக கலந்து கொள்ள ஆரம்பித்தனர். தேவன் அற்புதமாக அவர்களது விசுவாசத்தைக் கனப்படுத்தி, ராமுவிற்கு பூரண சுகமளித்தார். இன்றும் அவர், தான் காண்போரிடமெல்லாம் இயேசு தனக்கு ஈந்த சுகத்தைக் குறித்து 'இயேசுவால் கூடாதது ஒன்றுமில்லை' என்று பலமாய் சாட்சி பகருகிறார். அல்லேலூயா!*

**மே 30 செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரூபன் ரவி M.
திருமதி. மெர்லின் ஜெனட் பிராங்ஃக்ளின்
திருமதி. கிளாடி பியூலா சாமுவேல் ஜெபகுமார்
திரு. இஸ்ரேல் நத்தானியேல் எட்வர்ட் S.
திரு. வாவச்சன் M.P., திருமதி. உஷா ஏசுபாபு
திருமதி. அஞ்சலிதேவி பாண்ட்டுமிலி அகிபாடா

# ஆந்திரப் பிரதேசம்

## பெனுகொண்டா: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** இஸ்லாபுரம் சபையில் வைத்து நடைபெற்ற வாலிபர் பயிற்சி நிகழ்ச்சியில் 12 வாலிபர்கள் கலந்துகொண்டு ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். மரவப்பள்ளியில் வைத்து சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டுள்ளது. தினந்தோறும் காலை ஜெபம் இணையதளம் மூலம் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றது. வாராந்திர இரவுநேர ஜெபக் கூடுகைகள் அதுகலப்பள்ளி, சோமந்தப் பள்ளி, பெனுகொண்டா, சந்திரகிரி மற்றும் குருவந்தலப்பள்ளி கிராமங்களில் நடைபெற்று வருகின்றன. 3 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சோமசேகர் காலில் வந்த நோய்த்தொற்றுப் பிரச்சினையிலிருந்தும், ஜோனத்தான் மலேரியாவிலிருந்தும் பூரண சுகமடைந் துள்ளனர். தனது மாமனாரால் உண்டான கழுத்து வெட்டுக்காயத்திலிருந்து ரியாஸ் தேவ கிருபையால் உயிர்த்தப்பியுள்ளார். பால் பிரபாகருக்கு நல்லதொரு கம்பெனியில் வேலை கிடைத்துள்ளது. சுசிலாம்மாவிற்கு நடந்த கண் அறுவை சிகிச்சையில் தேவ கரம் உடனிருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்திரகிரி பகுதியைச் சார்ந்த லலிதாவின் கணவர் தனது மனைவியின் விசுவாச வாழ்விற்குத் தடையாகயிராமல், தானும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு மனைவியுடன் சமாதானமாய் வாழ; மரவப்பள்ளி பகுதியைச் சார்ந்த ஒபுலேஷ் மற்றும் சோமசேகரின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் ஆவிக்குரிய கூடுகைகளில் பங்கேற்பதைத் தடை செய்யாமலிருக்க; குருவந்தலப்பள்ளி பகுதியைச் சார்ந்த கருணாகரன் இருசக்கர வாகன விபத்தினால் உண்டான கைக்காயத்திலிருந்து விரைவில் நல்ல சுகமடைய; படுத்தப்படுக்கையாயிருக்கும் ஆனந்தம்மா மற்றும் கருணாம்மா தங்களது பெலவீனங்களிலிருந்து சீக்கிரத்தில் குணமடைய; அனாதைகளாக இருந்து தங்களது வாழ்வாதாரத் தேவைகளுக்காக தினக்கூலிகளாக வேலைப்பார்த்து படிக்கும் 10,12-ம் வகுப்புகளைச் சார்ந்த விஜய் மற்றும் அசோக் நல்ல மதிப்பெண்கள் பெற்று வாழ்வில் உயர ஜெபிப்போம்.

## *பாட்டுப்பாடின ஊமைப்பெண்!*

*ராஜஸ்தான், சாம்ரானியா பணித்தளம். வாய்ப்பேச முடியாத லுஹாரி கிராம 15 வயது ரேணுபாயை அவளது பெற்றோர்கள் சுகத்திற்காக அநேக மருத்துவரிடத்திலும் மந்திரவாதிகளிடத்திலும் அழைத்துச் சென்றும் பலனேதும் இல்லாமல், இறுதியாக அவள் லுஹாரி கிராம சபைக்கு அழைத்து வரப்பட்டாள். சபை விசுவாசிகள் யாவரும் அவளுக்காக இரவும் பகலுமாக ஜெபிக்க ஆரம்பித்ததின் விளைவு, மிகுந்த தேவ கிருபையால் அவள் தற்போது தேவ நாமம் மகிமைப்படும்படி பேசவும், தேவனைத் துதித்துப் பாடவும் செய்கிறாள். இந்த அற்புதத்தைக் கண்ட அவளது குடும்பத்தார் இயேசுவைப் பின்பற்ற ஆயத்தமாயுள்ளனர். தேவனுக்கே மகிமை!*

## மே 31 புதன்

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சந்திரன் K.V., திரு. விஜயன் T.
திரு. அருள் ஆசீர் D., திருமதி. சுவாதி ஷர்மா
திருமதி. சந்தானி பர்தன் மனோஜ்குமார் பானி

### ரோதம்:

#### தேபதத்த லிமா & சோனியா ராணி

**துதிக்க:** நரேஷின் குடும்பம் காவல்துறை வழக்கிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளது. 10 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. கோவிந்தப் பாவின் பழத்தோட்டத்தில் நல்ல மகசூல் கிடைத்துள்ளது. சிவம்மா நுரையீரல் நோய்த்தொற்றிலிருந்தும், ஹரிக்கா சரீரத்தில் ஏற்பட்டுள்ள பூஞ்சை நோய்த் தொற்றிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆதார் அட்டை தவறு என்று புறக்கணிக் கப்பட்ட நிறுவனத்திலிருந்து மீண்டும் வேலைக்கான வாய்ப்பை கங்கம்மா பெற்றுள்ளார். இருசக்கர வாகன விபத்தின் மூலம் தனது ஞாபக சக்தியை இழந்திருக்கும் நாகராஜின் உடல்நலம் தற்போது சற்று தேறி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அம்மைநோயினால் பாதிக்கப் பட்டுள்ள துருக்கலப்பட்டணம் கிராமப் பிள்ளைகளின் சுகத்திற்காக; 2 வருடமாகப் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பைலாஞ்சி, கண் அறுவைசிகிச்சைக்குப்பின் சீரான கண்பார்வை இல்லாமல் கஷ்டப் படும் கோலன்னா மற்றும் கண்நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் 10 வயது சிறுவன் கார்த்திக் சுகமடைய; 2 வருடங்களாகக் குடும்பத்தை விட்டுப்பிரிந்திருந்து தனது மனைவியை ஆலயத்திற்குச் செல்லவிடாமல் தடுக்கும் பிரதுஷாவின் கணவர் சிவ பிரசாத் மனந்திரும்பி, தன் குடும்பத்துடன் சேர்ந்து வாழ; குடிக்கு அடிமையாகி அக்கம்மாவை வேலைக்குப் போகவிடாமல் தடுக்கும் ரவி மனம்மாற; வயிற்று வீக்கத்தினால் அவதிப்படும் நாகராஜ் சுகமடைந்து இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### திருவள்ளூர்:

#### பால் ஆனந்தன் & சாரா ஜோதி

**துதிக்க:** கோபால்புரம் மற்றும் காக்கா கண்டிகை சபைகளில் விசுவாசிகள் வாஞ்சையுடன் ஆராதனைகளில் பங்கேற் கின்றனர். கிருஷ்ணாபுரம் பகுதியைச் சார்ந்த காந்தம்மாள், உஷா, சங்கீதா மற்றும் முத்துகொண்டபுரம் பகுதியைச் சார்ந்த எஸ்தர் ஆகியோர் கிறிஸ்துவில் நன்கு வளர்ந்து வருகின்றனர். தக்ஷிணா மூர்த்தி மற்றும் கமலாவின் விவசாய நிலங்களில் ஆசீர்வாதமான அறுவடை கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது பெற்றோர்களை இழந்து எதிர்கால வாழ்வின் தேவைகளோடிருக்கும் விசாலாட்சி, காயத்ரி, வந்தனா ஆகியோரின் தேவைகள் பூர்த்திசெய்யப்பட; தனது கணவனை இழந்திருக்கும் வேணு கோபாலபுர காஞ்சனாவின் மனஆறுதலுக் காகவும், அவருடைய குடும்பம் மற்றும் பிள்ளைகளின் வாழ்வாதார தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட; விபத்தினால் உண்டான கால்காயங்களோடிருக்கும் கிருஷ்ணாபுரம் பகுதி ராஜேந்திரன் விரைவில் குணமடைய; முத்துக்கொண்டபுரம் கிராம மக்கள் தங்களது வறுமை, அறியாமை, மூடப்பழக்கவழக்கங்கள், குடி மற்றும் போதைப்பழக்கங்களிலிருந்து விடுபட ஜெபிப்போம்.


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
நடத்தும்
தமிழ்நாடு
மாநில முகாம்
2023
மே
18 ▶ 21
வியாழன்
காலை 10 மணி
முதல்
ஞாயிறு
காலை 8 மணி
வரை
இடம்
பெத்தேல்,
டேனிஷ்பேட்டை, சேலம்
வாழ்த்துரை
Rt. Rev. Dr. A. கிறிஸ்டியன் சாம்ராஜ்
M.A., B.D., M.Th., Ph.D.,
Bishop of Tranguebar, TELC
செய்தியாளர்கள்
Rev. V. T. ஜான்சன் (மதுரை)
சகோ. C. ரெஜினால்டு
சகோ. S. ஜாண் பெர்லின்
சகோ. I. K. ஆபிரகாம்
சகோ. Y. நவநீதர்
மற்றும் பணித்தள ஊழியர்கள்
கருப்பொருள்
நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்
ஆகாய் 2:23
• பெரியவர்கள்
• வாலிபர்கள்
• இளம் வாலிபர்கள்
• சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்
• பதிவுக்கட்டணம்
பெரியவர்களுக்கு ரூ. 200/-
சிறுவர்களுக்கு ரூ. 100/-
தரிசனமிகு பாடல்கள்
அனலூட்டும் செய்திகள்
உணர்வூட்டும் சந்தியா வேளைகள்
பணித்தள பகிர்வுகள்
ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,
மிஷனெரி தரிசனத்தில் வளரவும்,
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
அணிதிரண்டு வாருங்கள்
மாநில முகாமிற்கு
பதிவுச் செய்ய இங்கு
ஸ்கேன் செய்யவும்

Regd. Newspaper for India No.17759/69

## முகாம் வளாகம் வந்தடைய...

டேனிஷ்பேட்டை பெத்தேல், சேலம் – பெங்களூரு நெடுஞ்சாலையிலுள்ள தீவட்டிப்பட்டியிலிருந்து 6 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொம்மிடி, லோக்கூர், இராமமூர்த்தி நகர் செல்லும் பேருந்துகள் மூலம் வரலாம். (பஸ் நிறுத்தம்: பெத்தேல் மருத்துவமனை)

உங்கள் வருகை குறித்த தகவலை பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களை சந்தித்து அழைத்து வருவார்கள்.

மே 18ம் தேதி அதிகாலை முதல் சேலம் இரயில் நிலையம், சேலம் பேருந்து நிலையம், டேனிஷ்பேட்டை, தீவட்டிப்பட்டி சந்திப்புகளில் உங்களுக்கு உதவி செய்ய தன்னார்வ உதவியாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.

**பயண ஒழுங்கிற்கு தொடர்பு கொள்ள**
சகோ. ஞானதாஸ் 9042945090
சகோ. ரத்தினராஜ் 8903703232

Scan to link camp location in Google map

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தங்குவதற்கு தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு புத்தகம், பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.

fmpb Youth & Teen wings
Bible And Missionary Biography Contest 2023

# தமிழ் மாநில அளவிலான வாலிபர் வேதாகம தேர்வு

(இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கானது)

### Syllabus...

- எஸ்றா, நெகேமியா, எஸ்தர், ஆகாய் முழுவதும்
- 2023 ஏப்ரல், மே மாத அறைகூவலில் வெளியிடப்பட்டுள்ள மிஷனெரி வாழ்க்கை வரலாறு
- ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையுள்ள கேரீத் மாத இதழிலிருந்தும் வினாக்கள் கேட்கப்படும்.

- தேர்வு மாநில முகாமில் வைத்து நடைபெறும்.
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபருக்கு சிறப்பு பரிசுகள் உண்டு.
- தேர்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் கொடுக்கப்படும்.
- வயது வரம்பு: 13-30 வயது வரை

*முகாம் குறித்த விபரங்களுக்கு:*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 600053.
தொலைபேசி : 044 - 26570404, 9443039555, 9445048443

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***